நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 14 30-08-94 செவ்வாய்க்கிழமை ஓசை 193

## நல்லூர் ஆலய சூழலில் குருதிக் கொடைக்கு ஏற்பாடு

நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவை முன்னிட்டு நோயாளர் நலன் புரிச் சங்கம் குருதிக் கொடை அளிப்பவர்களிடமிருந்து அதனைச் சேகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது அவசரகால தினங்களில் குருதி தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காகவும், சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான குருதியைப் பெறுவதற்காகவும், ஜீவமரணப் போராட்டம் நடத்தும் உயிர்களைக் காக்கவும் குருதிக் கொடை அளிப்பது அவசியமானது என்பது தெரிந்ததே. கருணையுள்ளம் (6ஆம் பக்கம்பார்க்க)

# யுத்தநிறுத்தம், பொருளாதார தடை நீக்கம்; ராணுவத்தினர் மத்தியில் கருத்து முரண்பாடு

## யாழ். ஆயர் - அமைச்சர் அஷ்ரப் கொழும்பில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் துறைமுக கப்பல் துறை அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பை கொழும்பில் கடந்த வெள்ளியன்று சந்தித்து யாழ்ப்பாண நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது அமைச்சர் அஷ்ரப்பை யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளை பார்வையிட்டு தீர்வுக்கு உதவுமாறு ஆயர் கேட்டுக்கொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆயர் தம்மை யாழ். வருமாறு அழைத்ததாகவும் சமாதான தீர்வு காணவேண்டியதன் அவசியம் இப்போது எழுந்துள்ளதாகவும் அமைச்சர் அஷ்ரப் கருத்து வெளியிட்டார்.

## சந்திரிகா - கென்னத் சந்தித்து பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு, துரித தீர்வு காண்பதில் கவனம் செலுத்தி வருவதாக, பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார். அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணான்டோவைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சந்திரிகா குமாரணதுங்கா, இலங்கை திருச்சபையின் மேற்றிராணியார் கென்னத் பெர்ணான்டோவையும் அண்மையில் சந்தித்திருந்தார்.

## ஜேர்மனி முறையிலான தேர்தலுக்கு ஆலோசனை

### அமைச்சர் அஷ்ரப், தொண்டமான் வரவேற்பு

தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை இல்லாமற்செய்வதற்கு அரசும் ஐ.தே.கவின் ஒரு பகுதியும் ஆதரவு தெரிவித்துள்ள இவ்வேளையில் ஜேர்மனிய ... இன கட்சிகள் வரவேற்றுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன,

ஜேர்மன் முறைப்படி 50 சதவீதமான எம்பிகள் விகி... தெரிவு செய்யப்படுகின்றனர். அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அஷ்ரப் ஜேர்மன் தேர்தல் முறையை வரவேற்...

## புதிய அரசாங்கத்தின் முயற்சிகள் பாதிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கென, போர் நிறுத்தம் செய்வது தொடர்பாகவும், பொருளாதாரத்தடையை நீக்குவது குறித்தும் சிறிலங்கா பாதுகாப்பு படை அதிகாரிகளின் மட்டத்தில் பலத்த கருத்து முரண்பாடு நிலவுவதாகத் தெரியவருகின்றது. இதன்காரணமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போர் நிறுத்தம், பொருளாதார தடை நீக்கம் தொடர்பாக பாதுகாப்பு படை அதிகாரிகள் இடையே பாரிய கருத்து வேற்றுமைகள் தற்போது அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக பிரான்ஸ் செய்தி நிறுவன செய்தியாளர் அமால் ஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

இக்கருத்து வேற்றுமை பாதுகாப்பு படையினர் மத்தியில் தீவிரம் அடைந்து வருவதாகவும் பொருளாதார தடை நீக்கத்தையும், யுத்த நிறுத்தத்தையும் சில படை அதிகாரிகள் விரும்பவில்லை என்றும் எனவே புதிய அரசாங்கத்தின் நோக்கம் மேலும் தாமதமாகும் நிலை ஏற்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் நேரடியாக தொடர்பு கொண்டு, அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதையே பெரிதும் விரும்புவதாகவும் இவர்கள் தமது பெற்றோர் உறவினர்களுடன் வாழ விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை படையினரின் நடவடிக்கையினால் புதிய அரசாங்கம் தனது செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம், சுண்டிக்குளம் பகுதியில், சிறிலங்கா கடற்படையினரின், பீரங்கித் ...

## படை அதிகாரிகளை சந்திரிகா நாளை மறுதினம் சந்தித்து பேசுவார்

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நாளை மறுதினம் (வியாழக்கிழமை) படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

போர் நிறுத்தம், பொருளாதாரத் தடைநீக்கம் தொடர்பாக இராணுவத்தினர் மட்டத்தில் பலத்த கருத்து மோதல் நிலவுவதைத் தொடர்ந்தே இச் சந்திப்பு இடம் ...

திப்பில் இராணுவ அதிகாரிகளின் கருத்துக்கள்விரிவாகக் கேட்டறியப்படும் எனவும் அதேவேளை அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக விளக்கப்படும் எனவும் தெரிவிக்கப் ...

# [illegible]

## அமைச்சர் அஷ்ரப், தொண்டமான் வரவேற்பு

தற்போதைய விகிதாசார தேர்தல் முறையை இல்லாமற்செய்வதற்கு அரசும் ஐ. தே.கவின் ஒரு பகுதியும் ஆதரவு தெரிவித்துள்ள இவ்வேளையில் ஜேர்மனிய முறையில் எம்பிகள் தெரிவுசெய்யப்படுவதை சிறுபான்மை இன கட்சிகள் வரவேற்றுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன,

ஜேர்மன் முறைப்படி 50 சதவீதமான எம்பிகள் விகிதாசார பிரதிநிதித்துவம் மூலமும் மிகுதி 50 சதவீதத்தினர் நேரடித் தேர்வு மூலமும் தெரிவு செய்யப்படுகின்றனர்.

அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அஷ்ரப் ஜேர்மன் தேர்தல் முறையை வரவேற்றுள்ளார். இ தொ. கா. தலைவர் தொண்டமானும் இத்திட்டத்தை வரவேற்றுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தல் திகதி செப்டம்பரில் முடிவாகும்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டம்பர் ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்எனசண்டே ஐலண்ட் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கான திகதி நவம்பர் 9ஆம் திகதி என தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக பாராளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக நடைபெற்றது ஜனாதிபதி தேர்தலை நடத்த பிரத்தியேக தயாரிப்புகள் ஏதும் செய்ய வேண்டிய அவசியமில்லை என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வீதியில் இறந்து கிடந்தவர் மரணத்தில் சந்தேகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் சீவல் தொழிலாளி ஒருவர் வீதியில் இறந்து கிடக்கக்காணப்பட்டார். இதுகுறித்து தமிழீழ காவல் துறையில் புகார்செய்யப்பட்டதை அடுத்து காவல் துறையினர் சடலத்தை எடுத்துவந்து யாழ்.போதனா மருத்துவமனையில் விசாரணைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு வீதியில் இறந்து கிடந்தவர் கொக்குவில் தளையாளியை சேர்ந்த சபாபதி சந்தசாமி (வயது 60) என்பவராவார் இச்சம்பவம் தொட

(6ம் பக்கம் பார்க்க)

# மருதானை வெடி விபத்தில் 7பேர் காயம்; வீடுகள் சேதம்

(கொழும்பு)

மருதானையில் நேற்றுக் காலை நடைபெற்ற வெடி விபத்துச் சம்பவமொன்றில் பத்துவயது சிறுவன் உட்பட ஏழு பேர் காயமடைந்ததுடன், பன்னிரண்டு வீடுகள் வரை சேதமடைந்தும் உள்ளன.

வெடி விபத்து நடைபெற்ற வீடு முற்றாக சேதமடைந்தது. அவ் வீட்டில் இருந்த இரண்டு பேரும் காயமடைந்தவர்களில் அடங்குவர்.

இவ் வெடி விபத்துக்கு, சமையல் எரிவாயு கசிந்ததே காரணமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# திறைசேரிகொள்ளையில் ஐ. தே. க. ஈடுபட்டது

## அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பல நூற்றுக்கணக்கான கோடி டொலர்களை திறைசேரியில் இருந்து கொள்ளையடித்துள்ளதாகவும் இதனை 'திறைசேரி' கொள்ளை என்றே வர்ணிக்க முடியும் எனவும் தகவல் சுற்றுலா விமான போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் நடை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காவல்துறை எனக் கூறி வீட்டைசோதனையிட முயற்சி

(யாழ்ப்பாணம்)

தம்மை காவல் துறையினர் என சொல்லி அரியாலை பகுதியில் வீடுகளுள் புகுந்த இளைஞர் கோஷ்டி ஒன்று அங்கு சோதனை நடத்தியதாகவும் தம்மை மிரட்டியதாகவும் அப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சிலர் யாழ்ப்பாணம் காவல் துறையினரிடம் புகார் செய்துள்ளனர்,

இக்கோஷ்டியினர் நேற்று முன்தினம் இரவு 10 30மணியளவில் வீட்டின் பின்பகுதியால் உள்ளே நுழைந்து நீங்கள் கசிப்புகாய்ச்சுவதாகஎங்களுக்குதகவல்கிடைத்துள்ளது; அதற்காக நாங்கள் காவல் துறையில் இருந்து விசாரிப்பதற்காக வந்துள்ளோம் எனக் கூறினராம். அவர்களது நடத்தையில் சந்தேகம் கொண்ட அவ் வீட்டார் மேற்கொண்டு விசாரிக்கவே ஒருவாறு சமாளித்தவாறு பின்பக்கமாக ஓடிவிட்டதாக சம்பவம் நடந்த வீட்டார் தெரிவித்துள்ளனர்.

மேற்படிசம்பவம்அரியாலை பகுதியில் வசிக்கும் யாழ். வலயம் ஒன்று கல்வி அதிகாரி ஒருவரின் வீட்டிலும் சென் அன்ரனீஸ் கல்லூரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம், சுண்டிக்குளம் பகுதியில், சிறிலங்கா கடற்படையினரின், பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு மீனவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். என். தங்கராசா (38 வயது, சுண்டிக்குளம்) என்பவரே படுகாயமடைந்த மீனவராவார்.

# கோமாரி இன்று வரும்

'கோமாரி' கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேரும் என எதிர்பாக்சப்படுகிறது. இக்கப்பல் நேற்று வருமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வந்து சேரவில்லை. இக்கப்பலில் தபால் பொதிகளும் எடுத்து வரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (யோ)

# இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரிபடகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# [illegible]

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா நாளை மறுதினம் (வியாழக் கிழமை) படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

போர் நிறுத்தம்,பொருளாதாரத் தடைநீக்கம் தொடர்பாக இராணுவத்தினர் மட்டத்தில் பலத்த கருத்து மோதல் நிலவுவதைத் தொடர்ந்தே இச் சந்திப்பு இடம் பெறவுள்ளதாகவும் இச் சந்திப்பில் இராணுவ அதிகாரிகளின் கருத்துக்கள்விரிவாகக் கேட்டறியப்படும் எனவும் அதேவேளை அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக விளக்கப்படும் எனவும் தெரிவிக்கப்

(6 ஆம் பக்சம் பார்க்க)

# நாளைய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு ஏதும் எடுக்கப்படமாட்டாது

வடபகுதி மீதான பொருளாதார தடை நீக்கம் குறித்து நாளை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எதுவும் எடுக்கப்படமாட்டாது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

புதிய அரசாங்கத்திற்கும் படை அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை காரணமாக நாளை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்ட பொருளாதாரத் தடை தொடர்பான அறிவுறுத்தல்கள் தாமதம் அடையும் என தெவிக்கப்படுகிறது.

நாளை மறுதினம் வியாழக் கிழமை சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க படை அதிகாரிகளைச் சந்தித்த பின்பே இது தொடர்பான அறிவுறுத்தல்கள் விடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பேச்சுக்கள் நடப்பது நிச்சயம் அமைதி பற்றி தெளிவில்லை

## பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிப்பு

பேச்சுக்கள் நிச்சயம், ஆனால் அமைதியைப் பற்றி தெளிவாக கூறமுடியாதுள்ளது. எதுவாயினும் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என தெரிவித்திருப்பதை நல்ல சமிக்கையாகவே கருதமுடியும் எனபி பி.சி முகவர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்

பி.பி.ஸி.யின் கொழும்புமுகவர் ஜோர்ஜ் ஆர்னி, இது பற்றி மேலும் தெரிவிக்கையில். யாழ்ப்பாணத்திலிருந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வழக்கு தாக்கல் செய்யப்படாத அரசியல் கைதிகள் உடன்விடுதலை

(கொழும்பு)

குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படாத சகல அரசியற் சிறைக் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யப் போவதாக வெளிநாட்டு வர்த்தக, நீதி. அரசியலமைப்புவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் 'லங்காதீப' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

சென்ற வன்முறை காலங்களில் பல்வேறு காரணங்களை முன்வைத்து கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் இதுவரையில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய முடியாத சிறைக் கைதிகள் தொடர்பாக இவ்வாறு ஒரு நடவடிக்கையை எடுக்க தான் தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

அரசியல் கைதிகள் தொடர்பாக ஆராய்ந்த ஜபலத் கமிஷனின் அறிக்கைக்கு அமைய

(6 ஆம் பக்கம் பார்ட்க)

# எம்பிலிப்பிட்டிய சம்பவம்; அதிபர் இடைநிறுத்தம்

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் முப்பத்தியொரு மாணவர்கள் காணாமல்போனது தொடர்பாக நேரடியாக தொடர்பு கொண்ட பாடசாலை முன்னாள் அதிபர் தயாநந்த கலப்பதி நேற்று வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட காரணத்தை முன்வைத்து தனது பாடசாலையில் ஒரே வகுப்பை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**வைத்திய சேவை**

வயிற்றுப்புண், இருதய சுவாச வியாதிகள், வாதம், வலிப்பு மாதவிடாய் கோளாறுகள், மகப்பேறின்மை, மூல, மூத்திர, தோல் வியாதிகள், Digital Electronic பரி சாதனைகளுப் சிறந்த சிகிச்சையும் என பெயர் பெற்றது. இரெட்ணம் வைத்தியசாலை 129. ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணம். (9233)

**பாலர் ஆசிரியராக ...**

விரைவில் பயிற்சிக பொ. த (சா | த) கடைசித் தகைமை சனி, ஞாயிறு நேரில் கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக்கல்லூரி 73, பருத்தித்துறைவீதி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (9212)

**அராலியூர்**

**ந. சுந்தரப்பிள்ளையின்**

அக்கரைச் சீமையில், ஆசிரியரது 45 வருடகால இலக்கிய அனுபவத்தில் பிறந்தது வாசித்தால் உண்மைக் கதை போலிருக்கும் இங்கிலாந்து போய் வந்த உணர்வு ஏற்படும் எங்கும் கிடைக்கும் (9183)

**ஜெயா அழகு மாடம்**

விற்பனை அகமும் காட்சி அகமும் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கு வடக்கு வீதியில் அமைந்துள்ளது என்பதை வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகிறோம் (சி-10159)


### அதிபர்கள் கூட்டம்

சண்டிலிப்பாய் -தெல்லிப்பழை கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழன் பிற்பகல் 2மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்

# திறைசேரி நிதி நிலைமை சந்திரிகா அறிக்கை கோரல்

(கொழும்பு)

இவ்வருட நவம்பரில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு செலவுத் திட்டம் அடுத்த வருட பெப்ரவரிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதால் பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடத்த முடியாது என்பதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் திறைசேரி அமைச்சரிடமிருந்து எதிர்வரும் வருடத்திற்கான செலவினங்கள் பற்றியும் வருமானங்கள் பற்றியுமான மதிப்பீடுகளை சமர்ப்பிக்கும்படி கேட்டுள்ள பிரதமர் சந்திரிகா திறைசேரியிடம் தற்போது அதன் நிதிநிலைமை குறித்த அறிக்கை ஒன்றை கோரியுள்ளார்.

தேர்தல் வாக்குறுதி வழங்குமுகமாகவே இந்த நிதி நிலை அறிக்கை கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 1084செயற்கைக்கால்கள் 6வருடங்களில் உற்பத்தி

### ஜெய்ப்பூர் நிறுவன திட்டப்பணிப்பாளர்

(குருநகர்)

1987-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கை அவயங்கள் உற்பத்தி நிறுவனத்தால் இதுவரை 1084 செயற்கைக்கால்களும், 80 செயற்கைகைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக நிறுவன திட்டப் பணிப்பாளர் திருமதி திலகவதியோகநாதன் தெரிவித்தார்.

செயற்கை மனித அவயங்களை உற்பத்தி செய்யும் உள்ளூர் மூலப்பொருள்களுடன் கொழும்பிலிருந்து கொண்டு வர வேண்டிய சில மூலப்பொருள்கள் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக எடுத்துவர முடியாது இருந்ததால் அவயங்கள் உற்பத்தி செய்வதில் பின்னடைவு ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்சமயம் ஒன்றரை லட்சரூபா பெறுமதி வாய்ந்த மூலப்பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளதால் செயற்கை மனித அவயங்கள் உற்பத்தி மீண்டும் துரிதமாக நடைபெறுவதாகவும் திருமதி திலகவதி யோகநாதன் தெரிவித்தார். (21)

# பிரிட்டிஷ் பிரதிநிதி கிழக்கு விஜயம்

### அகதி முகாம்களை பார்வையிடுவார்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அகதி முகாம்களை பார்வையிட்டு உதவி வழங்க கொழும்பு வந்துள்ள பிரிட்டிஷ் தனியார் அமைப்பொன்றின் பிரதிநிதி நேற்று திங்கள் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார். அங்கு அவர் ஒருவாரம் தங்கியிருந்து சகல அகதி முகாம்களையும் பார்வையிடுவார்.

இவர் திருமலை, பொலநறுவை அகதி முகாம்களுக்கும் செல்வார்.


**தியாகி திலீபன்**

**7ஆம் ஆண்டு நினைவு தின**

**கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்**

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுமகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்: 22-08-94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி 10-09-94

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169)



**வெலிங்டன் சந்திக்கருகில்!**

**தனது 9 வருட அனுபவத்தில்!!**


## ஓடுகள் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு வகுப்பறையின் கூரையிலுள்ள 30ற்கு மேற்பட்ட முகட்டு ஓடுகளையும் 50 ற்கு மேற்பட்ட சாதாரண ஓடுகளையும் சென்ற சனி இரவு திருடர்கள் களவாடியுள்ளனர்.

இரவு 9 மணியளவில் சத்தத்தைக் கேட்ட சில இளைஞர்கள் ஓடிச் சென்ற பொழுது கள்வர் சைக்கிளில் தப்பிவிட்டனர். அவர்கள் விட்டுச் சென்ற சில ஓடுகள் சாக்குடன் கயிறு, மற்றும் ஒரு சோடி பாதணி அவ்விடத்தில் காணப்பட்டன.

இத் திருட்டு சம்பந்தமாக காவற்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## இ. தொ. கா மறுப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த வேளையில் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவை ஐ தே க பெறும் நோக்கில் இ தொ. கா முயற்சி எடுத்திருந்தது எனவும், இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச். எம். அஷ்ரப்புடன் இ. தொ. கா சார்பில் தொலை பேசி மூலம் தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் வெளிவந்த செய்திகளை இ தொ, கா மறுத்துள்ளது.

# பொருண்மிய கண்காட்சிக்கு மக்கள் கூட்டம் வருகை

நல்லூரில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியினைக் காண்பதற்கு தினந்தோறும் பெருமளவு மக்கள் கூடுகின்றனர்

தமிழீழ தேசத்தின் தன்னிறைவு பொருண்மிய வளர்ச்சியில் நம்பிக்கையூட்டுவதாக அமைந்த இக் கண்காட்சியில் பல பகுதிகளாக தமிழீழத்தின் கட்டுமானம் சித்தரிக்கப்பட்டுள்ளது

விவசாயம், கடல்வளம், விலங்கு வேளாண்மை, கைத்தொழில், உட்கட்டுமானம், சக்தி உணவுபதனிடல், கிராமிய உற்பத்திக்குழு, பனை தென்னைவள அபிவிருத்தி, வர்த்தகம் என பகுதிரீதியாக எதிர்கால தமிழீழத்தின் சுபீட்சத்தை விளக்கப்படங்கள் மூலமும், மாதிரிகள், பொறிகள் மூலமும் உருவாக்கி மக்களுக்கு புள்ளிவிபரங்களுடன் விளங்கப்படுத்தப்படுகின்றது.

அத்துடன் மாலை நேரங்களில் பொருண்மிய மேம்பாடு கருதிய கலை நிகழ்வுகளும் நாள்தோறும் நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டி சாதனை படைத்து வரும் புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழகத்தினருக்கு புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக்கழகம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'பாராட்டு விழா' ஒன்றை நடாத்தியுள்ளது மேற்படி கழகத் தலைவர் திரு க. மதியாபரணம் தலைமையில் இவ் விழா நடை... (22)

## பாம்பு தீண்டி பெண் மரணம்

(பருத்தித்துறை)

பாம்பு தீண்டி குடும்பப் பெண் ஒருவர் மரணமான சம்பவமொன்று புலோலியில் நிகழ்ந்துள்ளது. புலோலியைச் சேர்ந்த திருமதி இராமச்சந்திரன் (வயது 46) என்பவரேபாம்புதீண்டியதால் மரணமானவராவார். பாம்பு தீண்டியதும்உடனடியாக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இவர் பின்னர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு வைத்திய சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. (25)

## இந்துக்கல்லூரி 7-ல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மூன்றாம் தவணையை எதிர்வரும் ஏழாம் திகதி புதன்கிழமை அன்று ஆரம்பிக்கின்றது என கல்லூரி அதிபர் தெரிவித்தார். எதிர்வரும் முதலாம் திகதி அன்று ஆரம்பிக்கவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (88)

## இட மாற்றம்

(கொழும்புத்துறை)

சங்கானை மின்தறி ஆலையில் இதுவரை காலமும் இயங்கி வந்த இடம் பெயர்ந்த பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசக் காரியாலயம் நாளை புதன் கிழமை காலை தொடக்கம் சங்கானை மக்கள் வங்கி செயல்பட்ட இடத்தில் இயங்கவுள்ளது. (24)

## கைலாச வாகனம்

[கொழும்புத்துறை]

நல்லூர் கந்த சுவாமி கோவில் 20-ம் திருவிழா சந்தனா கோபாலர் உற்சவம் நாளை புதன் கிழமை காலை 7-00 மணிக்கும், கைலாச வாகனம் திருவிழா மாலை 5-00 மணிக்கும் இடம் பெறும். [24]

## விமான நோட்டம்

(வடமராட்சி)

குண்டு வீச்சு விமானம் ஒன்று வடமராட்சிபகுதிகளை வட்டமிட்டு வருகின்றது. நேற்றுக் காலை 6.40 மணியளவில் பலாலியில் இருந்து வந்த 'புக்காரா' விமானம் ஒன்று பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பகுதிகளை வட்டமிட்டுவிட்டு பலாலி நோக்கி விரைந்தது.

மற்றும் அச்சுவேலி, கரைக்குடத்தனைப் பகுதிகளையும் புக்காரா, உலங்குவானூர்திகள் வட்டமிட்டுச் சென்றன. (யோ) (சி)

## நினைவு கூருகின்றோம்...

**30. 08. 1994 ..**

1989-ம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை-கல்முனைப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ஜெயம்** (கிருஷ்ணபிள்ளை ஜீவரத்தினம் - வீரமுனை, கல்முனை - அம்பாறை)

யாழ் - கோண்டாவிலில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**நீக்ரோ** ( – சபாரத்தினம் - செட்டிகுளம்-வவுனியா)


யாழ் - மாவிட்டபுரத்தில் இந்திய பரா அதிரடிப் படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நெடுமாறன்** (வைத்திலிங்கம் கணேசநாதன் -வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி - யாழ்)

1992 -ம்ஆண்டு திருமலை-கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**அறிவுமணி-பிரசன்னா** (நமசிவாயம் காளிராசா - 13-ம் கட்டை, தம்பலகமம் - திருமலை)

மட்டு-பெருமாவெளிக்காட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில், வீரச்



தனது 9 வருட அனுபவத்தில்!!
கணனித் துறைக் கெனத்
தனித்து இயங்கும் !!!

# UNIKCO

## COMPUTER CENTRE

புதிய பிரிவுகளை ஆரம்பிக்கின்றது !!!!

| COURSE | FEES | DURATION |
|---|---|---|
| BASIC | 1750/- | 4 months |
| PASCAL | 1750/- | 4 months |
| CLIPPER | 3000/- | 4 months |
| TURBO C | 3000/- | 4 months |
| WORDSTAR Rel 5 5 | 2500/- | 3 months |
| dBASE III pLUS | 2500/- | 3 months |
| LOTUS 1-2-3 | 2500/- | 2 months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING (BASIC/PASCAL, CLIPPER/dBASE III, / WORDSTAR and LOTUS) | 9500/- | 6 months |

Join With Us To Study The Latest Computer Technology

★ தவணைமுறையில் கட்டணங்கள்
★ தமிழில் விளக்கங்கள்
★ கூடிய நேர செய்முறைப்பயிற்சி

★ வார இறுதி வகுப்புகள்
ஆரம்பம்: 3-9-94

★ வார நாள் வகுப்புகள்
ஆரம்பம் 5-9-94

மேலதிக விபரங்கட்கு:
37, CLOCK TOWER ROAD
JAFFNA.

(சி/10200)

த்தை விளக்கப்படங்கள் மூல
மும், மாதிரிகள், பொறிகள்

## முக்கிய அறிவித்தல்

வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டுள்ள யாழ் பல்கலைக் கழக ஊழியர்கள் பலர் வழமை போல் வேலைக்குத் திருப்பியுள்ளனர். இது வரை வேலைக்கு வராத மற்றைய ஊழியர்கள் 01.09 1994 ஆம் திகதிக்கு முன் வேலைக்கு வருமாறு கேட்கப்படுகின்றனர் 01.09.1994 க்குப் பின் வேலைக்கு வராத ஊழியர்கள், தங்கள் வேலையில் இருந்து தாங்களாகவே நீங்கியவர்களாகக் கருதப்படுவர்.

பதிவாளர்
(சி/ 10207)

ளது மேற்படி சழகத் தலைவர் திரு க. மதியாபரணம் தலைமையில் இவ் விழா நடை பெற்றது. (22)

## இளம்தாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கையில் விரக்தியுற்ற இளம் குடும்பப் பெண் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார். கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசித்துவந்த தீவகத்தைச் சேர்ந்த தேனி (வயது-18) என்னும் ஒரு பிள்ளையின் தாயாரே தற்கொலை செய்து கொண்டவர் ஆவார். (22)

## பாராட்டு விழா

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்விக் கோட்ட சாவகச்சேரி பிராந்திய தொலைக் கல்வி நிலையத்தில் போதனாசிரியர்களாக சேவை புரிந்து பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு வ. சூரியநாதன், திருமதி எல்-பரராஜசிங்கம் ஆகியோருக்கு தொலைக்கல்வி பயிலும் மாணவர்கள் அண்மையில் பாராட்டு விழா ஒன்று நடத்தினர்.

- 13-ம் கட்டை, தம்பலகமம் - திருமலை)

மட்டு-பெருமாவெளிக்காட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில், வீரச்சாவெய்திய,

சத்தியராஜ்-ஜெயம் (கதிர்காமத்தம்பி மனோகர்- தம்பிலுவில் - அம்பாறை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் இலங்கை-இந்திய படையினராலும், தேசவிரோதசக்திகளினாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10201)




விலை குறைப்பும்,
அன்பளிப்பும்

இனியதோர்
செய்தி
'மில்க் வைற்
நீல சவர்க்காரம்'

கட்டி ஒன்று ரூபா 6/-
சிறிய (பேபி) சவர்க்காரம் ரூ. 3/-

25 மில்க்வைற் (நீல) சவர்க்கார மேலுறைக்கு ஒரு அப்பியாசக் கொப்பி அன்பளிப்பு.
'மில்க்வைற்'

(சி-10202)

தவறாது
நல்லூருக்கு
வாருங்கள்
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவன
கண்காட்சியைப்
பாருங்கள்
பரிசுப் போட்டி ஒன்று
காத்திருக்கிறது!
உங்களுக்கு
பெறுமதி மிக்க பரிசுகள்
கிடைக்கும்!
போட்டி விபரங்கள்
கண்காட்சி வாசலில்

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்

(சி 10206)

யாழ்ப்பாணம் மாநகர ... நூலகம்

# ஜனாதிபதி ஆட்சி முறையை விஜேதுங்காவும் விரும்பவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் காமினி திசாநாயக்கா

(கொழும்பு)

சிறுபான்மை இன மக்கள் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்குகளை அளித்ததன் மூலம் அவர்கள் ஆட்சியை அமைத்துள்ளதாகஎதிர்க்கட்சி தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

பி பி. ஸி. சிங்கள சேவை செய்தியாளர் எல்மோ. பெர்னாண்டோவுக்கு அளித்தபேட்டியிலே மேற்படி கருத்தை காமினி தெரிவித்தார். இது மக்களின் எதிர்பார்ப்பை மையமாக கொண்டு வாக்கு அளித்ததாக கொள்ளமுடியும் என்றும் ஏனெனில் ஒரு அரசாங்கத்தினால் தீர்க்க முடியாத பிரச்சினையை இன்னோர் அரசாங்கம் தீர்க்கும் என எதிர் பார்ப்பது மனிதனின் சாதாரண எதிர் பார்ப்பே என தெரிவித்தார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி ஆறு கட்சிகளை கொண்டது என்றும் அதனுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்துள்ளதாகவும் எனவே அரசாங்கத்தை பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் என்று கொள்ள முடியாது என அமைச்சர் அஷ்ரப் தெரிவித்ததாகவும் இவ் அரசாங்கத்தை பொது ஜன ஐக்கிய முன்னணி முஸ்லிம் காங்கிரஸ் இணைந்த அரசாங்கம் என்றும் அமைச்சர் அஷ்ரப் அழைக்க வேண்டும் என கூறியதையும் காமினி நினைவு படுத்தினார்.

பாராளுமன்றத்திடம் அதிகாரம் இருப்பதே தான் விரும்பியதாகவும் அதனை முன்னிட்டே ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியை அமைத்ததாகவும் இன்று ஜனாதிபதி விஜேதுங்கா உட்பட அனேக ஐ. தே. க. உறுப்பினர்கள் அதனை விரும்புவதாகவும் எனவே பொ. ஐ மு இது குறித்த பிரேரணையை பாராளுமன்றத்தில்கொண்டுவருமாயின் அதனை ஆதரிந்து அத்தீர்மானத்தை நிறைவேற்ற தாம் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

# மைசூர்பருப்பின் விலை ரூபா 22ஆக குறைப்பு

(கொழும்பு)

மைசூர் பருபபின் விலையை 22 ரூபாவாகக் குறைக்கும்படி அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுவரை 24 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த இந்தபருப்பினை உடனடியாக 22 ரூபாவுக்கு விற்குமாறு உள்ளூர் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் திரு. கிங்ஸ்லி விக்கிரமரத்ன அறிவித்துள்ளார்.

செயற்கைத்தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையைக் கூட்டி விற்பதற்கு சில வர்த்தகர்கள் முயன்று வருவதாக அரசிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இதனை முறியடிப்பதற்காக வேஒருகிலோபருப்பை22ரூபாவிற்கு விற்குமாறு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் பணிக்கப்பட்டுள்ளது. மேலும் மேலதிக பருப்பு விரைவில் இறக்குமதி செய்யப்படும் எனவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# சொத்து விபரம் அறிவிக்க பா. உ. களிடம் கோரிக்கை

(கொழும்பு)

சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் சொத்து விபரங்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கிடைக்க வழி செய்வதாகவும், ஊழல் தொடர்பான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதற்கே இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சந்திரிகா அரசுக்கு ஆதரவு ஈ.பி.டி.பி. உறுதியளிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதென ஈ பி டி. பி. அம் முன்னணியின் பொதுச் செயலாளரிடம் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண சந்திரிகா அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஈ. பி டி. பி ஆதரவு வழங்கும் எனவும் அக்குழு உறுதியளித்துள்ளது.

# நான்கு நாடுகள் கிரிக்கெட் செப்டம்பர் 4இல் ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்காவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நான்கு நாடுகளுக்கு இடையிலான சிங்கர் உலகத் தொடர் கிரிக்கட் ஆட்டத்தில் விளையாட இலங்கை சார்பில் 15 பேர் கொண்ட குழு புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் திசாநாயக்காவின் அங்கீகாரத்துடன் தெரிவு செய்யப்பட்டுள்ளது

செப்ரெம்பர்நான்காம்திகதி முதல் 17-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கு இலங்கை அணியின் தலைவராக அர்ச்சுனா ரணதுங்காவும் உதவித் தலைவராக அரவிந்தடி சில்வாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் றோசான் மகாநாம, சுனில் சமரவீர, சஞ்சீவ ரணதுங்க, ஹாசன் திலகரட்ண, குமுது தஸநாயக்க, சனத் ஜெயசூரிய, றுபான் கல்பகே, முத்தையா முரளீ ...

... ரேலியா-பாகிஸ்தான், எஸ். எஸ். சி. மைதானம், செப்ரெம்பர் 9 - அவுஸ்திரேலியா இந்தியா (பகல், இரவு விளையாட்டு) பிரேமதாசா விளையாட்டரங்கு. செப். 12-இலங்கை-பாகிஸ்தான் எஸ். எஸ். சி. மைதானம், செப். 13-அவுஸ்திரேலியா - இலங்கை சரவணமுத்து விளையாட்டரங்கு, செப். 15-இந்தியா-பாகிஸ்தான் (பகல், இரவு) பிரேமதாசா விளையாட்டரங்கு, செப். 17-முதல் சுற்றில் முதல் இரு அணிகளுக்கும் இடையிலான இறுதி யாட்டம் (பகல், இரவு) பிரேமதாசா விளையாட்டரங்கு.

# கே. பி. ரட்ணாயக்காவை ஈ. பி. டி. பி ஆதரித்ததாம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரச்சினை ...

பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் கே. பி: ரட்ணாயக்காவுக்கு ...

# மல்வத்த பீடாதிபதி சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

புதிய பிரதமர் மக்களின் அபிலாசைகளை நன்குணர்ந்து அவர்களின் நன்மைக்காக பாடுபடக்கூடிய துணிச்சலையும், வலிமையையும் பெற்றிருக்கிறார். இவ்வாறு மல்வத்தை பீடபீடாதிபதி வணரம் புக்வெல விபஸ்ஸிதேரோ தெரிவித்தார்.

தலதா மாளிகையில் வழிபாட்டை முடித்த பிரதமரும், அவரது குழுவினரும் மல்வத்தை பீடபீடாதிபதியை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமருடன், அவரது தாயாரும் அமைச்சருமான திருமதி சிறிமாவோ, சபாநாயகர் கே. பி இரத்நாயக்க, மத்திய மாகாண ஆளுநர் பி சி. இம்புலான ஆகியோர் உடன் சென்றிருந்தனர்.

# வாக்காளர் அ. அட்டை இல்லாவிடின்தேர்தல்இரத்து

## - சென்னையில் டி. என். சேஷன்

வாக்காளர்கள் அனைவருக்கும் வரும் நவம்பர் 30-ம் திகதிக்கு முன்பாக அடையாள அட்டைகள் வழங்கப்படாவிட்டால் அடுத்தஆண்டு ஜனவரி மாதத்திற்கு பின்னர் எந்தத் தேர்தல்களும் நடத்தப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் மீண்டும் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வரும்பெப்ரவரிமாதம்தேர்தல் நடத்தப்பட வேண்டிய ஆறு மாநிலங்களில், அடையாள அட்டை வழங்கப்படா விட்டால் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடாது என்றும், இது உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பை பொறுத்து இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், இந்த விவகாரத்தால் அரசியலமைப்பு நெருக்கடி எதுவும் தோன்றாது எனவும், அரசியல் தேக்க நிலை உருவாகாது எனவும் தெரிவித்தார்.

# 10 மாத சம்பள முற்பண கடன் பெற முடியும்

(நல்லூர்)

6 மாதச்சம்பள முற்பணக் கடன் பெற்றுள்ள உத்தியோகத்தர்களும் 10 மாதச்சம்பள முற்பணக்கடனுக்குவிண்ணப்பித்து மிகுதிப் பணத்தைப் பெறமுடியும். ஆனால் இதனை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சில் நிதி இருக்க வேண்டும்.

ஆனால் 10 மாதச்சம்பள முற்பணக்கடன்தொடர்பான சுற்றுநிருபம் வந்ததன் பின்னர் 6 மாதச் சம்பளக்கடன் வழங்கப்பட்டிருப்பின் இக்கடனுக்கான கழிவு மேற்கொள்ளப்பட்டு ஆறுமாதம் முடிவுற்ற பின்னரே இப்பத்து மாதச் சம்பளமுற்பணக் கடனைப் பெற விண்ணப்பிக்க முடியும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வை. பி புஸ்ஸதெனியா சகல திணைக்களத் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார். (17)

# கனகபுரம் சம்பியன்

ஈழநாதம் வன்னிப்பதிப்பின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ...

# மூன்றுமாத காலத்திற்குள் பேச்சை தொடங்க வேண்டும்

## தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி

(கொழும்பு)

எதிர்வரும் மூன்றுமாத காலத்திற்குள் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசியல் பேச்சுவார்த்தைகளைப் புதிய அரசாங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்று தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர், ஈரோஸ் செயலாளர் நாயகம் ஆகியோர் கையொப்பம் இட்டு இவ் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இதில் நடந்து முடிந்திருக்கும் தேர்தலில் தமது கட்சிக்கு வன்னிமாவட்டத்திலும் கிழக்கிலும் மக்கள் அளித்திருக்கும் தீர்ப்பிற்கு தமிழ் தேசிய முன்னணி தலைவணங்குகிறது. நாம் எதிர்பார்த்ததைவிட அதிக வாக்கை வன்னிமக்கள் எமக்கு அளித்திருக்கும் அதேவேளையில் கிழக்கு மாகாணத்தில் எமது முன்னணி தோல்வியடைந்துள்ளது. யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முடிவுகளைப் பொறுத்தவரை அவற்றை நாம் நிராகரிக்கலாம் என்பதை தெளிவாகக் கூறவிரும்புகிறோம். தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பிற்கு மதிப்பளித்து எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகளைச் சீரமைக்க நாம் உறுதி கொள்கின்றோம். தேர்தல் முடிவுகளிலிருந்து இன்னுமொரு முக்கியமான விடயத்தை நாம் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.

தமிழ் மக்களின் நலன்கருதி ஒரு பரந்த அரசியல் திட்டம் ஒன்றை வகுத்துக்கொள்வதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் மறுப்புத் தெரிவித்து தனித்தனியாகப் போட்டியிட்ட காரணத்தினால் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் முற்றாக இல்லாது ஒழிக்கப்பட்டுவிட்டது. திருகோணமலையில் இருவருக்கும் தலா ஒரேயொரு ஆசனம் கிடைத்திருக்கிறது. மட்டக்களப்பிலும், வன்னியிலும் தலா ஒரே விதமே வீழ்ச்சியடைந்துள்ளது கடந்த முறை ஏழு தமிழர்கள் வெற்றியீட்டிய கிழக்கில் இம்முறை நான்கு தமிழர்களே வெற்றியீட்டியுள்ளனர். இதற்கான தோல்வியினை ஒட்டுமொத்தமாக நாம் விடுத்த அழைப்பினை நிராகரித்த தமிழ்க் கட்சிகள் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

இம் முறை நடந்த தேர்தல் மூலம் கடந்த 17 வருடத்தில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது இதனை நாம் வரவேற்கிறோம். கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரிந்தவிடயம் இனப்பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காண்பதில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப புதியஅரசாங்கமும்அதன் தலைமையும் செயற்படும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி கௌரவத்துடன் கூடிய சமரசத் தீர்வு ஒன்று கொண்டுவரப்படவேண்டும் என்பதே இன்று தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். இத்தகையதொரு தீர்வை ஏற்படுத்துவதில் அரசாங்கக் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐ தே. கட்சியும் குறுகிய அரசியல் லாபங்களை கருத்தில் கொள்ளாது இதயசுத்தியுடன்செயற்படல்வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

எதிர்வரும் மூன்றுமாத காலத்திற்குள்ளாகவாவது யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண அரசியல் பேச்சுவார்த்தைகளை அரசுஆரம்பிக்க வேண்டுமென எமது முன்னணி கோருகின்றது. இந்த எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் இந்த அரசின் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கை தொடர்பான நடவடிக்கைகளை ஆராய்ந்து எமது முன்னணி தமது நிலைப்பாட்டினை எடுக்கும்.

# இலவசமாகசெயற்கைக்கால் வழங்கப்பட்டது

(குருநகர்)

நல்லூர் லயன் கிளப் கால்களை இழந்துள்ள நான்கு வறிய மக்களுக்கு இலவசமாக செயற்கைக்கால்களை வழங்கியுள்ளது.

கடந்த 26-ம் திகதி மாலை 4-30 மணிக்கு சுண்டிக்குளி ஜெய்ப்பூர் செயற்கை அவயங்கள் உற்பத்தி நிலையத்தில் வைத்து செயற்கைக்கால்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. யோ... வைரவன் மனோராசா, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடியைச் சேர்ந்த திரு. பெருமாள் செல்வராசா, சுழிபுரம் பறாளை வீதியைச் சேர்ந்த முருகையா வசந்தகுமாரிஆகியோரேசெயற்கைக் கால்களை இலவசமாகப் பெற்றுக் கொண்டவர்களாவர்.

நல்லூர் லயன் கிளப் தலைவர் திரு. லயன் கே. துரைராசா இவர்களுக்கு செயற் ...

சிவ ரணதுங்க, ஹாசன் திலக ரட்ண, குமுது தஸநாயக்க, சனத்ஜெயசூரிய, றுபான் கல்பகே, முத்தையா முரளீ தரன், கிரமோதய விக்கிரம சிங்க, சமிந்தவாஸ்குமாரதர்ம சேன, ரவீந்திரபுஸ்பகுமார ஆகியோரே ஏனைய வீரர் களாவர்

செப்ரெம்பர்நான்காம்திகதி நண்பகல் கலாசார நிகழ்ச்சி களுடன் ஆரம்பமாகின்றன தொடர்ந்து இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான பகல், இரவு போட்டி பிரேம தாசா விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

செப்ரெம்பர் 7 - அவுஸ்தி

## ஈ.பி.டி.பி ஆதரித்ததாம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு நிலையான தீர்வைக் காண முன்வந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு தான் நிபந்தனை அற்ற ஒத்துழைப்பை நல்க முன்வந்ததாக ஈ.பி.டி.பியின் பேச்சாளர் எஸ். சிவதாசன் தெரிவித்துள்ளார்.

பி.பி. சி சிங்கள சேவையான சந்தேசியாவுக்கு அளித்த பேட்டியில் இக்கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் சபாநாயகர் தெரிவின் போது பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் கே. பி:ரட்ணாயக்காவுக்குதமது உறுப்பினர்கள்ஒன்பது பேரும் வாக்களித்ததாகவும் இதற்குக் காரணம் இவர் தமிழ் பேச மட்டும் அன்றி அதனை கிரகிக்கக் கூடிய தன்மை கொண்டுள்ளார்; எனவே தமது கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் அனேகர் தமிழ் மொழியிலே பாராளுமன்றத்தில் உரையாற்ற இருப்பதினால் சபாநாயகர் கே பிரட்ணாயக்கா மிகவும் தேவைப்படுபவர் என தெரிவித்தார்

பொதுஜன ஐக்கிய முன்னணியை எவ்வளவு தூரம் நம்புகிறோம் என்பதை தன்னால் கூற முடியாதிருப்பதாகத் தெரிவித்த அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி செய்யும் நல்ல திட்டங்களை தாம் ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழநாதம் வன்னிப்பதிப்பின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் கனகபுரம் அணி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. இவ் அணியைச் சேர்ந்த பூரணி என்பவர் சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## மரங்கள் திருட்டு

(யாழ் பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பு மக்களுக்கு புதிதாக அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கென கொண்டு வந்து போடப்பட்ட மரங்கள், சலாகைகள் திருட்டுப் போய் வருவதாக கூறப்படுகிறது. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இக்குடியிருப்பில் இது வரை திருட்டுப் போனவற்றில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளன. (22)

வைத்து செயற்கைக்கால்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. யோசெப் டேவிட், சுழிபுரம் காட்டுப்புலத்தைச் சேர்ந்த திரு.

நல்லூர் லயன் கிளப் தலைவர் திரு. லயன் கே. துரைராசா இவர்களுக்கு செயற்கைக் கால்களை அன்பளிப்புச் செய்தார். (21)

எமது முன்னணி தமது நிலைப்பாட்டினை எடுக்கும்.

## சனசக்தி தோல்வி

(கொழும்பு)

வறுமை ஒழிப்பு, மற்றும் நிவாரணம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சனசக்தி வேலைத் திட்டம் தோல்வி கண்டிருப்பதாக சன சக்தி திட்டம் மற்றும் சனசக்தி நம்பிக்கை நிதியம் என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## வலயம்-2 பாடசாலைகள் முதலாம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம் வலயம் 2 இல் உள்ள பாடசாலைகள் யாவும் முன்னர் திட்டமிட்டவாறு எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் எனவும் அன்றைய தினம் அதிபர், ஆசிரியர்கள் சிற்றூழியர்கள் அனைவரையும் கடமைக்கு செல்லுமாறும்,

க. பொ. த உயர்தரப் பரீட்சை நடக்கும் பாடசாலைகளில் அன்றைய தினம் வகுப்புக்கள் நடைபெறமாட்டாது. அன்று மாணவர்கள் பாடசாலைக்கு சமுகம் கொடுக்கத் தேவையில்லை, எனினும் ஆசிரியர்கள் சமுகம் கொடுக்கவேண்டும் எனவும் யாழ். வலயம் 2 கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி கேட்டுள்ளார்.

## தென்ஆசிய அரசியலில் விதவைகள் முன்னணியில்

### சமூக அரசியல் ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

தென் ஆசிய நாடுகளில் இராணுவ கெடுபிடிகள். அதிகமாக இருக்கின்ற போதும் பெண்கள் அதிலும் குறிப்பாக விதவைகள் சமூக அரசியல் அரங்கில் முன்னணியில் இருப்பதாக சமூக அரசியல் விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.


அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் திருமதி சந்திரிகாபெற்றவெற்றிபெண்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையைத் தோற்றுவித்து இருப்பதாகவும் அரசியல் வன்முறைகள் ஆசியப் பெண்கள் மத்தியில் தாக்கம் ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## தடுத்து வைப்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் தேர்தல் கால வன்செயல்களின்போது கைது செய்யப்பட்ட இருபது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசிய க்கட்சியைச்சேர்ந்த ஆதரவாளர்களில் ஆறுபேரை தொடர்ந்து விளக்கமறியலில் வைத்திருக்க மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு

24, 07. 1935

உதிர்வு

30. 08. 1993

### மனுவல் ஜேக்கப் (அருமைத்துரை)

அன்பின் சோதியே பாசத்தின் பிறப்பிடமே உங்கள் ஆசை முகம் மறைந்து ஓர் ஆண்டு சென்றாலும் இன்பமாய் நாம் வாழ்ந்த காலத்தை நினைத்து மறக்க முடியாமல் தவிக்கின்றோம். எங்கள் நல் வாழ்விற்கு வழி காட்டியாய் நின்ற எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு சென்றாலும் உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது.

19/4, பீச்லேன்,<br>ஈச்சமோட்டை,<br>யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,<br>மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(9229)

திணைக்களங்களுக்கு சொந்தமான

## பெற்றோல் வாகனங்கள் ஏலத்தில் விற்பனை

(கொழும்பு)

சகல அரசாங்க திணைக்களங்களினதும் பெற்றோல் வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் எனவும் அவற்றின் பாவனைக்கென முதல் கட்டமாக 100 டீசல் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் எனவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இவற்றில் பெரும்பான்மையானவை பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். ஜனசவியதிட்டத்தை பாராட்டிய அவர் கடந்த அரசாங்கம் அதனை சரிவர நடைமுறைப்படுத்தவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.

## கழுத்தில் சுருக்கிட்ட நிலை வயோதிபர் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மேற்கில் எண்பத்தைந்து வயது முதியவர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இவரது சடலம் விசாரணைக்காக காவல் துறையினரால் யாழ். போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் வயோதிபர் மிகவும் தாழ்வான ஒரு குடிசையில் முழங்கால் இரண்டும் நிலத்தில்முட்டியபடி இருக்க கழுத்தில் சுருக்கிட்ட கயிற்றுடன் கூரையில் பிணைத்தவாறு இருக்கக் காணப்பட்டதாக தெரிய வருகின்றது.

இவரது உடலை மீட்ட காவல் துறையினர் பிரேத பரிசோதனை நடாத்துவதற்காக உடலை யாழ் போதனா மருத்துவ மனையில் ஒப்படைத்தனர். (சி)

## ஐ. தே.க மீள புனரமைப்பு செய்ய நடவடிக்கை

### ரணில், காமினி உதவியும்பெறப்படும்

(கொழும்பு)

இரண்டு வாரங்களில் ஐ. தே. கவை புனர் அமைப்பு செய்யப் போவதாகவும் இதில் காமினி திசாநாயக்கா ரணில் விக்கிரமசிங்காவின். முழுமையானஒத்துழைப்பும் தலைமைத்துவமும் பெறப்படும் எனவும் ஐ. தே. க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிராமம் கிராமமாகசென்று ஐ. தே. க எதிர்கால திட்டங்களை விளக்குவதற்கும், தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தெளிவான விளக்கத்தை கொடுப்பதற்கும் இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ. தே. க அங்கத்தினர் தொகையை மேலும் ஒருலட்சத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக இதற்காக சகல சிரேஷ்ட உறுப்பினர்களின் உதவி பெற்று கொள்ள இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவித்துள்ளன.

# தமிழர் பிரதிநிதிகள் புலிகள் என மாவீரர் உணர வைத்தனர்

## நினைவுக் கூட்டத்தில் உரை

(தென்மராட்சி)

நாம் இன்று பலமாக நிற்கின்ற காரணத்தால் தான் தமிழர்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்று புதியஅரசு சொல்கிறது. இந்த அளவிற்கு புரியவைத்தவர்கள் இந்த மண்ணுக்காக, மக்களுக்காக, மரணித்த மாவீரர்களே.

இவ்வாறு சடந்த 27-ம் திகதி தென்மராட்சிக் கோட்டத்தில் சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் தென்மராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கிருஷ்ணா தலைமையில் இடம் பெற்ற காங்கேசன்துறையில் தாய்க்கப்பல் தகர்ப்பில் வீரச்சாவடைந்தமுதற்பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி அவர்களின் நினைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசானது தன்னுடைய தேர்தல் பிரசாரத்தில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும். அவர்களுடைய பிரச்சினை. இனப்பிரச்சினை யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்ற அம்சங்களை முன்வைத்து தன்னுடைய தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டது. தென் இலங்கையிலேயே அவர் அரசியல் ரீதியாக ஈட்டிய வெற்றி, தென் இலங்கைமக்கள் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலேயே ஆதரவாக இருக்கின்றார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இதேவேளை தமிழருடைய பிரச்சினையை தீர்ப்பதாகவிடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை நடாத்தத் தயார் என கூறப்படுகின்றது. தமிழருடைய உண்மையான பிரதிநிதிகள் புலிகளே என்று அவர்கள் ஏற்றுள்ளார்கள். இதை சொல்ல வைத்தது நமது பலம். நாம் பலமாக இருக்காவிட்டால் அவர்கள் எம்மை அடிமையாக்கி விடுவார்கள் இவர்கள் இப்போது இப்படிச் சொல்லுபவர்கள் வெகு விரைவில் எமக்கு ஒரு தனி அரசு அமைக்கும் உரிமை உண்டு என சொல்லும் நிலை உருவாக வேண்டும்,

விடுதலைப் போராட்டத்தில் முதற் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் வீரச்சாவு பெண்களுடைய கௌரவத்தினை தமிழீழத்தில் மட்டுமல்லாமல் இந்தஉலகத்திலேயேஉயர்த்தி வைத்திருக்கின்றது. எனவே தான் இன்று தமிழீழ விடுதலையில் பெண்கள் படை அணிகளுடைய செயல்பாடுகள், பங்குகள் பல உலக நாடுகளுடைய விடுதலைப் போராட்டங்களுக்கு படிப்பினையாக வழி காட்டுபவையாக அமைந்திருக்கின்றது.

தமிழீழத்தில் வாழ்கின்ற முழுப் பெண்களும் இந்த நிலையை புரிந்து தமிழீழ விடுதலையில் சமபங்கு ஆற்ற வேண்டும். அவ்வாறு ஆற்றுவதன் ஊடாகத்தான் எங்களுடைய பூரண விடுதலையை அடைய முடியும். பெண்களுடைய கௌரவம், அந்தஸ்து, உரிமை என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கவும் கூடியதாக இருக்கும் என்பதினை தமிழ்ப்பெண்கள் உணர வேண்டும் என்றார். இவரைத் தொடர்ந்து கலை பண்பாட்டுக்கழகத்தின் பதில் பொறுப்பாளர் திரு. சேரலாதன் அவர்கள் உரை நிகழ்த்தினார். இறுதியில் தென்மராட்சி கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்வு இடம் பெற்றது

(86)

## அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு:
24-01-1935

இறப்பு:
31-07-1994



### அமரர் மாணிக்கம் சுப்பிரமணியம்
(செவ்வந்தி)
(களஞ்சிய காப்பாளர்)

31-07-1994 அன்று கனடாவில் இயற்கையெய்திய அமரர் மா. சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை அவரது சொந்த இல்லத்தில் 30-08-1994 செவ்வாய்க்கிழமை இன்று நடைபெற இருப்பதால் இந்நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''நேசமணி வாசா'' -குடும்பத்தினர்

## கணிதபாட செயலமர்வு

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 வகுப்புகளிற் கணிதபாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும், செயலமர்வும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 1ஆம், 2ஆம் திகதிக

## இராணுவ செய்மதி அமெரிக்கா அனுப்பியது

(வாஷிங்டன்)

இராணுவ நோக்கங்களுடனான செய்மதியொன்றை அமெரிக்கா நேற்று முன்தினம் விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. அதிசக்தி வாய்ந்த ராக்கட்டுக்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ள இச் செய்மதியில் அதிநவீனம் வாய்ந்த இலக்ட்ரானிக் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன எனினும் இச் செய்மதியின் நோக்கம், செயல்பாடு, மற்றும் வினைத்திறன் என்பன பற்றிய தகவல்களை வெளியிட அமெரிக்க விமானப் படையினர் மறுப்பு தெரிவித்து விட்டனர்

## குடிவரவு பிரச்சினை பேச்சுக்கு கியூபா சம்மதம்

### அமெரிக்காவும் இணக்கம்

(ஹவானா)

அமெரிக்கா ஏனைய பிரச்சினைகளை விட்டு குடிவரவுப் பிரச்சினை சம்பந்தமாக மட்டும் பேச்சு நடத்த முன் வந்தால் கியூபா அதற்கு தயாராகஇருப்பதாக கியூபா வெளிநாட்டு அமைச்சர் கூறியுள்ளார்

பொலிவியாவிற்கு விஜயம் செய்த அவர் அங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இதனைத் தெரிவித்தார் இதே சமயம் இது குறித்து பேச்சு நடத்த அமெரிக்காவும் சம்மதித்தது

## ஜார்க்கண்ட் சுயாட்சி மத்திய அரசு எச்சரிப்பு

(டில்லி)

இந்தியாவின் பீகார் மாநிலத்தில் ஜார்க்கண்ட் பகுதிக்கு சுயாட்சி வழங்குவது தொடர்பாக மாநில ஆட்சியாளர்களின் கருத்துக்களை மீறி மத்திய அரசு அரசியல் அமைப்பு ரீதியான அதிகாரங்களைப் பிரயோகிக்க நேரிடும். இவ்வாறு இந்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜார்க்கண்ட்பகுதிக்கு எதிர் வரும் பத்தாம் திகதிக்கு முன்பாக சுயாட்சி அந்தஸ்து வழங்கப்படும் என்று மத்திய அரசு ஏற்கனவே உறுதிமொழி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பீகார் மாநிலத்தின் மலைப் பகுதிகளிலும், காடுகளிலும் வாழும் இருபது மில்லியனுக்கும் அதிகமான ஜார்க்கண்ட் மக்கள் பீகார் அரசு தம்மை கவனிப்பதில்லை எனவும், தமது பிரதேச அபிவிருத்திக்கு உதவுவதில்லை எனவும் குற்றம் சாட்டி வருவது தெரிந்ததே;

## 7 ஆயிரம் அகதிகள் திருப்பியனுப்பப்படுவர்

### தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

இலங்கைக்கு திரும்ப விருப்பம் தெரிவித்த சுமார் 7 ஆயிரம் அகதிகள் அடுத்தமாத இறுதிக்குள் திருப்பியனுப்பப்படுவர் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது,

தமிழ்நாட்டில் தற்போது 70 ஆயிரம் இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர்;

## ஒப்பந்தம் கைச்சாத்து

(புதுடெல்லி)

தமிழக மீனவர்களின் நலனை முன்னிட்டு. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்தாக இருப்பதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

## விசாரணைக்கு அழைப்பு

(டில்லி)

அயோத்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் ஆஜராகும்படி பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல்.கே. அத்வானி, அசோக் சிங்கல், உமாபாரதி, முன்னாள் மகாராஷ்டிரா முதல்வர் கல்யாண் சிங், முரளிமனோகர் ஜோஷி, சிவசேனையின் தலைவர் பால் தக்கரே உட்பட பலரும் கேட்கப்பட்டுள்ளனர்.

மசூதி இடிப்பு தொடர்பாக இந்திய மத்திய புலனாய்வுத் துறை மொத்தமாக நாற்பது பேர் மீது குற்றம் சாட்டியுள்ளது தெரிந்ததே;

## சுயாட்சி கவுன்சில்

ஜார்ஜ்கண்ட்பகுதிக்கு சுயாட்சி கவுன்சில் ஒன்றை அமைப்பதற்கு அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு முன்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

எனினும் பீகார் மாநிலத்தின் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் இதனைக் கடுமையாக ஆட்சேபித்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது,

## அகதிகள் ஆர்ப்பாட்டம்

கியூபா மீதான கடல்வழி தடையை அமெரிக்கா மேற்கொண்டுள்ளதைக் கண்டித்து நேற்று அமெரிக்கா வந்த கியூபா அகதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## 12 இந்தியப்படை காஷ்மீரில் பலி

காஷ்மீரில் முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திய கைக்குண்டு வீச்சில் 12 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். இந்தியப்படையினர் நடத்திய பழிவாங்கல் தாக்குதலில் 8 பொது மக்கள் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

## குற்றதடுப்பு நடவடிக்கையில் தென் ஆபிரிக்கப் பொலிசார்

(ஜோகான்ஸ்பேர்க்)

குற்றச் செயல்களை ஒழித்துக்கட்டும் விடயத்தில் தென் ஆபிரிக்கா கூடுதல் கவனம் செலுத்துகிறது இது தொடர்பாக 1740 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் 164 பேர் மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள் எனவும், ஏனையோர் கொலை, கொள்ளை, வீடுடைப்பு போதைப் பொருள் பாவனை என்பன தொடர்பாகவும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழீழமெங்கும்...

தோலகட்டி உற்பத்திகள்

ஆண்டுகள் அறுபது கடந்தும் மாறாத சுவைதரும்

தோலகட்டி உற்பத்திகள்

30-08-1994 செவ்வாய்க்கிழமை இன்று நடைபெற இருப்பதால் இந்நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''நேசமணி வாசா'' -குடும்பத்தினர்
கரணவாய் கிழக்கு, கரவெட்டி. (5895)


கால்நடை வளர்ப்போரே!
உங்கள் முயற்சிக்கு உன்னத பரிசுகள்!

கால்நடை வளர்ப்போருக்கான

## போட்டிகள்

நல்லூர் கண்காட்சியை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்படும் கால்நடை வளர்ப்போருக்கான போட்டியில் கலந்து கொண்டு பெறுமதி மிக்க பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

### நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

உங்களிடமுள்ள சிறந்த கால்நடைகள் பற்றிய விபரங்களை எதிர்வரும் 01-09-1994ஆம் திகதிக்கு முன்னதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட/கோட்ட செயலக மூலம் எமக்கு அறிவியுங்கள்.

அக்கால்நடைகள் விசேட குழுவால் தங்கள் வீட்டிற்கோ, பண்ணைக்கோ வந்து பார்வையிட்டு மதிப்பீடு செய்யப்படும்.

அவற்றில் தெரிவு செய்யப்படும் கால்நடைகள் காட்சியகத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கு இறுதித் தேர்வு நடைபெறும்.

மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு முதன்மைச் செயலக / மாவட்ட / கோட்ட / வட்ட கிராமிய செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

(சி-10204)


தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சியும், செயலமர்வும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் காலை 8-30 மணிமுதல் மாலை 4 30 மணிவரை வட்டு. இந்துக்கல்லூரியில் மேற்படி சேவைக்காலப்பயிற்சி நடைபெறும். இந்த நிகழ்வில் ஆண்டு 6-ல் கணிதபாடத்தினை கற்பிக்கும் சங்கானை கல்விக்கோட்டத்தைச்சேர்ந்த சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கணித பாட சேவைக்கால ஆலோசகர் திரு, க. நடராசா அவர்கள் தெரிவித்துள்ளார். (41)

## விபத்து

(யாழ்ப்பாணம்)

அரசடி நல்லூர் வீதியால் வந்து கொண்டிருந்த ஒருவர் ஸ்கூட்டரினால் மோதுண்டு படுகாயமடைந்தார் இதே வேளை அவரை மோதிய ஸ்கூட்டர் நிற்காது ஓடிவிட்டதாக விபத்திற்கு உள்ளாகி படுகாய மடைந்தவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றை ஒன்று விலத்தும் போதே தன்னை அடித்து விட்டு சென்றதாகவும் தன்னால் அந்தவேளையில் அதன் இலக்கத்தை பார்க்கமுடியவில்லை எனவும் தெரிவித்தார்.

மேற்படி விபத்தில் படுகாயமடைந்தவர் வண்ணார் பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த வெ. முருகன் (வயது 31 என்பவராவார். இவர் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## அங்குரார்ப்பணம்

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கு, மத்தி, மேற்கு பகுதிகளில் வாழும் கடற்றொழிலாளர்களுக்கான கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை அமைப்பதற்கான அங்குரார்ப்பணக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது. (41)


ஆண்டுகள் அறுபது கடந்தும் மாறாத சுவைதரும்

தோலகட்டி உற்பத்திகள்

எப்பருவத்துக்கும் தக்கதென
மருத்துவர்கள் விதந்துரைத்த தோலகட்டி உற்பத்திகள்

★ தித்திக்கும் தேனமுத (நெல்லிரசம்)

★ புத்திக்குகந்த நல் மாதுளை ரசம்

★ பச்சைத் திராட்சையில் கச்சிதமாய் வடித்த புத்தம் புதுரசம்

பாட்டிக்கு அச்சாறு பாட்டனுக்கு ஊறுகாய்

பாலர் முதல் பள்ளிச் சிறார்களும் மற்றும் அனைவரும்
பக்குவமாய்ப் பருகிட பாங்கான உற்பத்திகள்

அன்றும் - இன்றும் - என்றும்

தோலகட்டி உற்பத்திகள்

அன்று முதல் இன்றுவரை அளவிலும் தரத்திலும்
அதி உன்னதமானதாக அனைவரும் விரும்புவது

தோலகட்டி உற்பத்திகள்

என்று கேட்டு வாங்குங்கள்...

உற்பத்தியாளர்:-
அருள் ஆச்சிரமம்
இல. 5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10205)

நல்லூர் இளைஞர் நூலகம்
மாநகர ட்டு மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

சரிந்து செல்லும் மனிதனை மற்றவர்களும் மேலும் ஓர் சந்து உந்தித் தள்ளுவர்.

- ஜோர்ஜ் ஹேர்பெர்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 30 03-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் 05

## டி.பி யின் நெருக்கடி

புதிய அரசாங்கத்திற்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான எதிர்கால உறவு நிலை எவ்வாறு அமையப் போகின்றது? எதிர்வரும் சுமார் நான்கு மாத கால சிறிலங்காவின் அரசியல் எவ்வாறு இருக்கப் போகின்றது? இவை எல்லாம் வடபகுதி மீதான பொருளாதாரத் தடை குறித்த விவகாரத்தின் மூலம் தெளிவாகி விடும்.

பொது ஜன ஐக்கிய முன்னணி வெளியிடும் அறிக்கைகள், பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான கேணல் அனுருத்த ரத்வத்தவும் வழங்கும் பத்திரிகைப் பேட்டிகள் மற்றும் பேச்சுக்கள்- உரைகள் என்பன யாவும் பொருளாதாரத் தடையை நீக்க அவர்கள் விருப்பம் கொண்டுள்ளதாகவே தெரிவிக்கின்றன. இவர்களின் தெளிவான நிலைப்பாடு நாளை நடைபெறவுள்ள அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் தெரிய வரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதாக பொ. ஐ. முன்னணி அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றுமானால் இதுவே ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவிற்கும், புதிய அரசாங்கத்திற்குமான முதல் முரண்பாடாகவும், பெரிய முரண்பாடாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் டி.பி. இதனை எவ்வாறு கைக் கொள்ளப் போகின்றார் என்பதைப் பொறுத்தே அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் இடம் பெறும் என்பதே யதார்த்த நிலையாகவுள்ளது.

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை மற்றும் அத்துடன் இணைந்த இராணுவ நடவடிக்கை என்பவையே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர் டி.பி. விஜேதுங்கா இதில் கடந்த காலத்தில் அவர் உறுதியாகவே இருந்து வந்தவராவார்.

எடுத்துக்காட்டாக கடந்த ஆண்டு, விடுதலைப்புலிகளின் காவலிலுள்ள கைதிகள் விடுதலை தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது பொருளாதாரத் தடையை நீக்க ஆரம்பத்தில் ஒப்புக் கொண்டுவிட்டு, பின்னர் திடீரென பொருளாதாரத் தடையை நீக்க அவர் பின்னடித்ததில் இருந்தே அவர் இவ்விடயத்தில் எந்தளவிற்கு அக்கறை காட்டுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் புதிய அரசாங்கம் பொருளாதாரத்

# கர்நாடக-குடகில் உருவாகின்றது

# லிவாக் எனும் விடுதலை இயக்கம்

கர்நாடக மாநிலத்தில் இப்போது அடக்கப்பட்டுள்ள - வளம் நிறைந்த கூர்க் மாவட்டம் தனி மாநிலமாக்கப் படவேண்டும் என்ற போராட்டம் வலுவடைந்துவருகிறது திராவிடர் இனத்தவரான 'குடகு' மக்கள் வாழும் வளம் கொழிக்கும் இந்த பூமி இப்போது சுரண்டல்காரரின் வேட்டைக்காடாகி விட்டது என்று உள்ளம் குமுறுகின்றார்கள் இந்நாட்டின் பூர்வீகக் குடிகளான குடகு இன மக்கள்

### தனிமாநிலமாக

1956-ஆம் ஆண்டு வரை இந்த கூர்க் பகுதி - ஒரு தனி மாநிலமாகவே இருந்தது. குரோடதேசம் என அழைக்கப்பட்ட இந்த பகுதிக்கு 4000 ஆண்டுகால தனித்தன்மை கொண்ட வரலாறு உண்டு. 1834-ல் மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்ட சமஸ்தானம் 538 அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டுள்ளது 1834 - ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பனி இப்பகுதியை 1947 ஆம் ஆண்டுவரை தன்வசம் வைத்திருந்தது அப்போதும் கூட கூர்க்பகுதியை கிழக்கிந்திய கம்பனி ஒரு மாநிலமாகக்கருதி தனி நிர்வாக அதிகாரியைத்தான் நியமித்திருந்தது பின்னர் நிர்வாக வசதிக்காக மட்டும் சென்னை ராஜதானியோடு சேர்க்கப்பட்டு இந்த நிலை 1956 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

சுதந்திர இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல் இந்தியாவில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ள மாநிலம் கூர்க் மாநிலம்தான் என்று பாராளுமன்றத்திலேயே கூறினார் சோழர், கங்கா, கடம்பா, ஹங்சலா, இக்கேரி மன்னர்களின் பரம்பரை ஆட்சியிலும் லிங்காயத்து மன்னர்களின் ஆட்சியிலும் அதற்கு பின் வந்த பிரிட்டிஷாரின் ஆட்சியிலும் கூர்க் பகுதியின் தனித்தன்மை காக்கப்பட்டு தனிநாடாகவே இருந்தது என்பதுதான் வரலாறு படையெடுத்து வந்த மன்னர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டாலும் கூட குடகு மக்களின் தனித்தன்மையிலும் கலாசாரத்திலும் குறுக்கிட்டதில்லை ஆனால் சுதந்திரம் பெற்ற இந்தியாவில் பார்ப்பன ஆளும்வர்க்கம்தான் இந்த தேசிய இனத்தின் தனித்தன்மையையும் ஒழிக்க திட்டம் தீட்டியது.

### கர்நாடகத்தோடு இணைக்க சதி

1956 இல் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது மாநில புனரமைப்புக் கமிட்டியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் பசல்அலி, எச்.என் குஞ்ஞு, கே. எம் பணிக்கர் ஆகிய மூவரும் ஆவர். அவர்கள் தந்த பரிந்துரையும் குடகு ஒரு முழுமையான தனி மாநிலமாக கருதப்பட்டு அதன் வளமும் செழுமை மிக்க கலாசாரமும் காப்பாற்றப்பட வேண்டும் என்பது தான். 1949ஆம் ஆண்டிலேயே மூன்று முக்கிய தலைவர்கள் பங்கேற்ற முத்தரப்பு கமிட்டி ஒன்று டில்லியில் கூடியது. மத்திய அரசு சார்பில் அன்றைய உள்துறை அமைச்சரும் அன்றைய குடகு முதலமைச்சர் சி. எம்.பி பூனாச்சாவும் எதிர்க்கட்சி சார்பில் பி. எஸ். பெல்லியப்பாவும் அதில் கலந்து கொண்டனர். அப்போதும் குடகு தனி மாநிலமாக நீடிக்க வேண்டும் என்றே முடிவு எடுக்கப்பட்டது. இவ்வளவிற்கு பின்பும் அன்றைய கர்நாடக முதலமைச்சராக இருந்த நிஜலிங்கப்பா மக்களின் உணர்வுகளுக்கு எதிராக குடகு முதலமைச்சர் பூனாச்சா, உள்துறை அமைச்சர் மல்லப்பா ஆகியோரை சரிக்கட்டிக் கொண்டு குடகு பகுதியை கர்நாடகத்தோடு இணைக்கும் சதி முயற்சியில் இறங்கினார்.

1956 இன் நவம்பர் மாதம் முதல் திகதி குடகு நாடு கர்நாடகத்தோடு இணைக்க முடிவெடுக்கப்பட்டு நேரமும் குறிக்கப்பட்டது. பசாலிகமிஷன் என்ற ஒரு கமிட்டியை நியமித்து - கர்நாடகத்தோடு குடகு இணைக்கப்பட்டாலும் குடகு இனமக்களின் தனித்தன்மையையும் கலாசாரத்தையும் காப்பாற்றுவதாக மக்களுக்கு உறுதி மொழியும் வழங்கப்பட்டது. குடகு மாநில சட்டப்பேரவை உறுப்பினர்கள் 24 பேரில் 20 பேர் இந்த இணைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

### மக்கள் கிளர்ச்சி

குடகு மக்கள் ஆவேசமாக பொங்கி எழுந்தனர். மக்களை அடக்க இராணுவம் அழைக்கப்பட்டது. ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர். மக்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய பெல்லியப்பாவும் கைது செய்யப்பட்டார் மக்கள் எதிர்ப்பு காரணமாக திட்டமிட்ட நாளில் இணைப்பு நடைபெறாமல் பல வாரம் கழித்து - இராணுவ நடவடிக்கைக்கு பின்பாக இணைப்பு நாடகம் மேடையேறியது. 1956 நவம்பர் முதல் திகதி குடகு இன மக்களின் துக்க நாள் என அம்மக்கள் கூறுகிறார்கள். இணைப்பு முடிந்த பின் அந்த மக்களின் தனித் தன்மையையும், கலாசாரத்தையும் காப்பாற்றுவோம் என பசாலி கமிஷன் தந்த வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. கேரளத்தவர்களும் கன்னடர்களும் வளம் கொழிக்கும் குடகுப் பகுதியில் நுழைய ஆரம்பித்து அதன் செல்வங்களை கொள்ளையிட ஆரம்பித்தனர்.

### ஆர் எஸ். எஸ். ஊடுருவல்

1102 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட குடகு நாட்டின் மக்கள் தொகை 4.8 லட்சம். குடகு நாடு கர்நாடகத்தோடு இணைக்கப்பட முன் ஒருவர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றால் 10 ஏக்கர் நிலம் வழங்கப்படும் முறை இருந்தது இணைப்பிற்குப் பின் இது ரத்தானது. மொத்த கோப்பி உற்பத்தியில் 13 சதவீத உற்பத்தியாவது குடகு குதியில்தான் சுற்றுலாத்தளம் என்ற பேர்வையில் குடகு மக்களின் கலாசாரங்கள் அழிக்கப்பட்டுவருகிறது. குடவாரெவா, குருபா, குடியா கவுடா ஒக்கலிகா, என 18 பழங்குடிகள் வாழும் இப்பிரதேசத்தில்இப்போது ஆர். எஸ். எஸ் என்ற தீவிர இந்துமத அமைப்பும் நுழைந்து கொண்டு ஆரிய கலாசாரத்தைப் புகுத்தி வருகிறது இந்துக் கலாசாரத்தை இந்த மக்களிடம் பரப்ப ஆண்டு ஒன்றிற்கு ஆர்- எஸ்- எஸ் செலவிடும் தொகை 50 லட்சம் ரூபா இம்மக்கள் இந்துக்கள் அல்ல.

### இயற்கையோடு வாழ்ந்தவர்கள்

உத்தரி, கைலு, பொது, சுக்லி என இவர்கள் கொண்டாடும் திருவிழாக்கள் விவசாயத்தோடுதொடர்புடையவை இக்கொண்டாட்டங்களுக்கு எல்லாம் அரச விடுமுறைகள் கிடையாது. உருவ வழிபாடு இவர்களுக்கு உடன்பாடு இல்லாதது இயற்கையை தெய்வமாக வணங்கக் கூடியவர்கள் அடர் மரங்கள்- நிறைந்த இந்த வளமான பகுதியில் மரங்களை வெட்டி வீழ்த்த கேரள ஏஜெண்டுகள் குவிந்துவிட்டனர் சிலிக்கான், கிரானைட் ஆகிய கனிம வளங்களும் உண்டு இஞ்சியும் நல்ல அளவில் உற்பத்தியாகிறது.

### கலாசாரத் தடை

இவர்களின் கலாசாரம் வீரத்தோடு தொடர்புடையது குழந்தைபிறந்தால் இருமுறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுடுவது வழக்கம் அதுபோல் யாரேனும் இறந்து விட்டால் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டு அந்தச்செய்தியை அறிவிப்பார்கள் இவர்களின் திருவிழாக்களில் அம்பிலிருந்து வில் விடுவது வழக்கம். இவை எல்லாமே இப்போது தடை செய்யப்பட்டுள்ளது

அமைதியை விரும்பும் மக்கள் இவர்கள். ஆனால் வீர மிக்கவர்கள் என்று கூறி இவர்களினுள் இந்த கலாசார நடவடிக்கைகளை பிரிட்டிஷ் ஆட்சி அனுமதித்தது ஆனால் சுதந்திர இந்தியாவின் ஆட்சியோ 1967 முதல் இதற்குத் தடைவிதித்து விட்டது. இராணுவத் தளபதிகளாக இருந்த திம்மய, கரியப்பா போன்றவர்கள் இந்த இனத்தைச் சார்ந்தவர்கள்தான்.

### விடுதலை இயக்கம் பிறந்தது

தொடர்ந்து பொருளாதார, கலாசார சுரண்டல்களுக்கு உள்ளான இம்மக்கள் இப்போது விழித்துக்கொண்டு விட்டார்கள். குடகுப்பகுதியை தனியாநில மாக்க வேண்டும் என்ற முழக்கத்தை முன் வைத்து விடுதலை இயக்கம் அங்கே உருவாகிவிட்டது. இந்த இயக்கத்தின் பெயர் குடகு விடுதலை வீரர்கள் படை Liberation Warrior of Kudagu) ஆங்லத்தில் சுருக்கமாக லிவாக் (LIWAK) என அழைக்கப்படுகிறது

### அணி திரட்ட நடவடிக்கை

1991ஆம் ஆண்டு இந்த அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் தலைக்காவிரி முன் கூடி தங்களுக்கென ஒரு தனி மாநிலத்தை உருவாக்கிக் கொள்ள சபதம் ஏற்றனர். 1992 ஒக்டோபரில் மக்களிடம் எடுத்துக் கூறி அணி திரட்ட அணிவகுப்புப் பயணம் (Route March) ஒன்றை 650 கிலோ மீற்றர் தூரம் நடத்தினர் பொலிசாரின் கெடுபிடி தாக்குதல் எல்லாவற்றையும் மீறி இந்தப் பயணம் வெற்றியுடன் முடிவடைந்தது இப்போது வீடுவீடாக சென்று மக்களை சந்திக்கும் இயக்கத்தை தொடங்கி வருகிறார்கள் இதுவரை 60 சதவீதம் மக்களை சந்தித்து முடித்துவிட்டனர். கடந்த ஒக்டோபர் 22 ஆம் திகதி ஐ. நா பிரகடனத்தின் படி தொங்குடிகள் தினத்தை (Indigenous PeopleDay) இவர்கள் நடத்திய போது அதற்கு 5000 மக்கள் திரண்டனர். குடகுப்பகுதியை இணைத்து கர்நாடக மாநிலம் உருவான தினத்தை கடந்த இரு ஆண்டுகளாக துக்க நாளாக இவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்த விடுதலை அமைப்பின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 18 நெறி முறைகளை பின்பற்ற உறுதி எடுத்துள்ளனர். புகை பிடிப்பதோ மது அருந்துவதோ இல்லை என்பது இவர்களின் உறுதி மொழிகளில் ஒன்று.

-நன்றி 'உண்மை 94':

# தேர்தல்கால வன்முறையில்

## ஒக்டோபரில் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 1993-

## குளங்கள் புனரமைப்பு

யாழ் குடா நாட்டிலுள்ள சிறிய குளங்களை புனரமைக்

ரத் தடையை நீக்க ஆரம்பத்தில் ஒப்புக் கொண்டுவிட்டு, பின்னர் திடீரென பொருளாதாரத் தடையை நீக்க அவர் பின்னடித்ததில் இருந்தே அவர் இவ்விடயத்தில் எந்தளவிற்கு அக்கறை காட்டுகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் புதிய அரசாங்கம் பொருளாதாரத் தடையை நீக்கவெனக் கொண்டு வரும் தீர்மானத்திற்கு டி.பி. விஜேதுங்கா எந்தளவிற்கு ஆதரவு அளிப்பார் என்பது கேள்விக்குரியதே. ஆனால் டி.பி. விஜேதுங்கா இதில் எந்த முடிவை எடுத்தாலும் அவரைப் பொறுத்து அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் இந்நிலையில் எதில் கூடுதல் லாபம் இருக்கின்றது என்பதை ஆராய்ந்து முடிவு செய்வதே அவருக்கு நன்மை பயக்கக் கூடியதாகும்.

டி.பி. விஜேதுங்கா பொருளாதாரத் தடை நீக்கத்திற்கு அனுசரணை வழங்காதுவிட்டால் டி.பி. மேலும் இனவாதியாகச் சித்தரிக்கப்பட்டு அவர் தொடர்ந்தும் யுத்தம் நடத்தவும், அழிவுகளை ஏற்படுத்தவும் விளையும் ஒரு கொடூரமானவராகவே சித்தரிக்கப்படுவார். இதே சமயம் ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டு அவற்றின் செயலாக்கத்தைப் பாராளுமன்றம் மூலம் தடுத்து நிறுத்தி இடைஞ்சல்களை புதிய அரசாங்கம் விளைவிக்கலாம்,

அத்தோடு டி.பி. விஜேதுங்கா யுத்தத்தைத் தொடர்வதன் மூலம் பெரும் ஊழல் மோசடிகளுக்கு ஒத்தாசையாக இருக்கின்றார் என்ற குற்றச்சாட்டையும் முன்வைக்கலாம். இதற்கு ஏற்றால் போலவே கடந்த காலத்தில் ஐ.தே.க. அரசு ஆட்சி செய்த காலத்தில் செய்ததாக பல ஆயிரம் கோடி ரூபா ஊழல் மோசடிகள் பற்றிய குற்றச்சாட்டை புதிய அரசாங்கம் முன் வைத்துள்ளது. இது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் டி.பி. விஜேதுங்காவை வலுவாகப் பாதிக்கக் கூடியதாகும்.

இதேசமயம் பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பான விடயத்தில் புதிய அரசின் நடவடிக்கைக்கு டி.பி. விஜேதுங்கா சம்மதிப்பாரேயானால் அவர் ஒரு கொள்கை அற்றவர் என்று விமர்சிக்கப்படுவார். அத்துடன் புதிய அரசாங்கத்துடன் சமரசம் செய்ய முற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டும் ஐ.தே.க. பக்கத்தில் இருந்தும், ஊழலை மறைக்கப்பார்க்கின்றார் என மக்கள் பக்கத்தில் இருந்தும் எழலாம்.

இதேவேளை பொருளாதாரத் தடை நீக்கம் தொடர்பான விடயத்தில் டி.பி. விஜேதுங்கா முட்டுக்கட்டையாகும் பட்சத்தில் அதனைத் தீர்ப்பதற்கு புதிய சில வழிகளை பொ.ஐ. முன்னணி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் ஊகிக்க முடிகின்றது. 'வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு வர்த்தமானி அறிவித்தல் அவசியமில்லை. முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் மூலம் இதை நீக்குவது சிறப்பானதாகும்' எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டது இதன் வெளிப்பாடு என்றே கொள்ள முடியும்.

இந்நிலையில் பொ.ஐ. முன்னணி அரசாங்கம் பொருளாதாரத் தடையை நீக்குவதாகத் தீர்மானம் எடுப்பின் அது ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்குபுதிய நெருக்கடிகள் பலவற்றை தவிர்க்க முடியாது உருவாக்கக் கூடும். இது அவரது எதிர்கால அரசியல் குறித்த முடிவாகவும் சிறிலங்காவின் அடுத்த கட்ட அரசியல் போக்கை நிர்ணயிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்று கூறலாம்.

# தேர்தல்கால வன்முறையில் 25 பேர் கொல்லப்பட்டனர்

## அநேகமானோர் பொ. ஐ. மு. ஆதரவாளர்

தேர்தல் நியமனப்பத்திர தாக்கல் செய்யப்பட்ட தினம் முதல் ஆகஸ்ட் 25-ஆம் திகதி வரை 25 அரசியல் கொலைகள் இடம் பெற்றுள்ளன இவர்களில் பிக்கு மற்றும் இரு பெண்களும் அடங்குவர் 23 கொலை முயற்சி சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

18 கொலைகள் தேர்தலின் முன்பும் 5 கொலைகள் தேர்தலின் பின்பும் இரு கொலைகள் தேர்தலன்றும் நடைபெற்றன கொல்லப்பட்டவர்களில் அநேகமானோர் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் ஏனையோர் ஐ.தே.க, முஸ்லிம் காங்கிரஸ், புளொட் அமைப்புகளை சேர்ந்தவர்கள்

16 பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களும் 4 ஐ.தே.க. ஆதரவாளரும் புளொட், முஸ்லிம் காங்கிரஸ் தலா ஒருவருமாக கொல்லப்பட்டனர் இக்கொலைகள் தொடர்பாக 65 பேர் கைதாகியுள்ளனர்.

# தமிழருக்கு கனடிய அமைப்பு நிவாரண உதவி வழங்க உறுதி

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகளை தாம் வழங்கவுள்ளதாக கனடிய அமைப்பொன்று யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் உறுதியளித்துள்ளது.

மேற்படி அமைப்பின் செயலாளர் கூடியவிரைவில் நிவாரணப்பொருட்களை வடபகுதிக்கு அனுப்பவுள்ளதாகவும் இதில் உணவு, உடை, முச்சக்சர நாற்காலி, மற்றும் மருத்துவ உபசரணங்கள் என்பனவும் அடங்கியுள்ளதாகவும் யாழ் அரச அதிபருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கண்டல் காடு அழித்தவரிடம் தண்டப் பணம் அறவீடு

### பருத்தித்துறை நீதிமன்று விதிப்பு

சட்டத்தை மீறி கண்டல் காடுகளை வெட்டிய இருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் தண்டப்பணம் அறவிட்டதோடு அவர்கள் கொண்டு வந்த விறகையும் பறிமுதல் செய்தது.

அண்மையில் கம்பர்மலை, சரணவாய் தெற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவர் கப்புது பகுதியில் கண்டற் காட்டழிப்பில் ஈடுபட்டிருந்த போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி விசேட கண்காணிப்பாளரால் பிடிக்கப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை காவல்துறையினர் நீதி மன்றின் முன் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து குற்றத்தை ஒப்புக் கொண்ட இவர்களுக்கு தலா 100ரூபா வீதம் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

1993-ம் ஆண்டு 4-ம் இலக்க தமிழீழ சட்டக் கோவையின்படி கண்டல்காடுகள் விறகுக்காக வெட்டப்படுவது 01-04-1994-ம் திகதி தொடக்கம் தடை செய்யப்படுவதாகவும் இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது,

## கிராமிய பாசறை

(தென்மராட்சி

கைதடி நாவற்குழி தெற்கு கோயிலாக்கண்டி பகுதியின் 5-ம் மாத ''கிராமியப்பாசறை'' நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி வியாழன் இடம் பெற்றது.

காலை 9மணிக்கு சிரமதானப் பணிகளும் அதனைத் தொடர்ந்து உதைபந்தாட்டம், தாச்சிப்போட்டிகளும் இடம் பெற்றன- பின்னர் மாலை 6மணியளவில் தென்மராட்சி கேடில்ஸ் கைத்தொழில் நிறுவனத்தின் 22-வது தும்புத் தொழிற்சாலை ஒன்று அக்கிராமத்தில் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது. மாதர் சங்கத்தின் தலைவியின் தலைமையில் இடம் பெற்றது. (86

## ஒக்டோபரில் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக 1993-94 கல்வியாண்டில் கல்வியைத் தொடரவிருக்கும் கலை, வர்த்தக, முகாமைத்துவ மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விஞ்ஞான பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (05)

## நன்னீர் சோதனை

(தொல்புரம்)

சுடாநாட்டில் கிணற்று நன்னீர் உவர்நீராக மாறிவருகின்ற தன்மை அதிகரித்துக் காணப்படும் பகுதிகளில் நன்னீரை பரிசோதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

மாவட்ட சூழல் சுற்றாடல் பாதுகாப்புக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி நடவடிக்கைகள் வலிமேற்குப் பிரதேசப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக சுற்றாடலில் நன்னீர் எவ்வாறு மாசுபடுகிறது என்பதை கண்டறியும் பொருட்டு வலிமேற்குப் பிரதேச சபையினர் ஊடாக அப்பகுதிகளின் கிணறுகளிலிருந்து மாதிரி நீர் பெறப்படுகிறது.

பிரதானமாக மேற்குறித்த பகுதிகளில் இருந்து மாதிரி நீரைப் பெற்று அதனுடைய அடர்த்தித் தன்மையையும், நைட்றேற்றுவின் தன்மையையும் அளவிடுவதற்காகவும் மாறுதலின் தன்மையை நுணுக்கமாக ஆராய்வதற்காகவும் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என தெரியவருவதோடு, மாதிரி நீரைச் சேமிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் வலிமேற்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (41)

## குளங்கள் புனரமைப்பு

யாழ் குடாநாட்டிலுள்ள சிறிய குளங்களை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் புத்தூர் கிரான் குளம், கோப்பாய் ஆலங்குளம் என்பன தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் உடுவில் கந்தரோடைக்குளம், மானிப்பாய் சேலன்காமம் குளம், மீசாலை வயல்குளம், வல்லிபுரக் குறிச்சிகவுடு கிராய் குளம், அரியாலை செம்மணிக்குளம் என்பனவற்றையும் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

எமது தேசத்தின் நீர்வளத்தைப் பேணும் நோக்குடன் மேற் கொள்ளப்பட்டு வரும் இந் நடவடிக்கையின் மூலம் ஏராளமான விவசாயிகள் நன்மையடையவுள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 30

### செவ்வாய் இரவு

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்துகொள்ளுங்கள்- தகவற்களஞ்சியம்
08 20 - நலந்தானா- திருவிழாக்கால வாகன விபத்துக்களும்ஆலோசனைகளும்
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம் - ''பகவி''
08. 50 - களமும் கானமும் -''நினைவுகள்''

### 1994. 08. 31

### புதன் காலை

07 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# போராட்டத்தை விரிவுபடுத்த பல்கலை. ஊழியர் முடிவு

யாழ் பல்கலைக்கழக ஊழியர் தொழிற் சங்கம் தமது போராட்டத்தினை விரிவுபடுத்தப் போவதாக தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலையும் ஊழியர் தொழிற் சங்கம் பல்கலைக்கழக நிர்வாகப் பகுதியின் முன்பாக மறியலில் ஈடுபட்டிருந்தது.

சுலோகங்களைத் தாங்கிய வண்ணம் நேற்றுக் காலை நிர்வாகப்பகுதியினர் வேலைக்கு வந்து கொண்டிருக்கையில் ஊழியர் தொழிற் சங்கத்தினர் மறியலில் ஈடுபட்டனர்.

எனினும் யாழ் பல்கலைக்கழக நிர்வாகப் பகுதிவழமை போல் நேற்று இயங்கியது.

இதன்போது யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் ஊழியர் தொழிற் சங்கத்தினர் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

அம் மகஜரில் எதிர் வரும் 31 ஆம் திகதி யாழ் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படவுள்ள தொழில்நுட்பவியலாளர் தரம் 2 பிரிவி - பி பதவிக்கு நியமனம் செய்வதற்கான நேர்முகப்பரீட்சையை நிறுத்துமாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் ஒன்றியம் பல்கலைக்கழகத்தில் எதுவித வேலை நிறுத்தம் மற்றும் மறியற் போராட்டத்தில் ஈடுபடவில்லை என அறிவித்துள்ளது.

மேலும் யாழ் பல்கலைக்கழகத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற பல்கலைக்கழக ஊழியர்களில் பலர் நாளுக்கு நாள் வேலைக்கு திரும்பிவருவதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

நேற்றும் இவ்வாறே பல ஊழியர்கள் போராட்டத்தைக் கைவிட்டு தத்தமது பகுதிகளுக்கு வேலைக்குத் திரும்பி வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(பா.சி)

# ஜனாதிபதிதேர்தலில்யாருக்குஆதரவு? இ. தொ. கா. இன்னும் முடிவில்லை

## கட்சித்தலைவர் தொண்டமான் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்று திட்டவட்டமாக தெரிவிக்க முடியாது என இ. தொ. கா தலைவர் செள- தொண்டமான் தெரிவித்துள்ளார்.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார் தொடர்ந்து அப்பத்திரிகைக்கு தொண்டமான் தெரிவிக்கையில் ஜனாதிபதி தேர்தல் நியமன பத்திரங்கள் தாக்கல் செய்த பின்னரே இது குறித்து இறுதி முடிவை தனது கட்சி எடுக்கும் என மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் இ. தொ. கா. சென்ற பொது தேர்தலில் இணைந்து போட்டியிட்ட போதும் தனி சுயேட்சை குழுவாக தொடர்ந்து இயங்கும் என்றும் எந்த பிரதான கட்சியுடனும் இணைந்து செயல்படும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்திய அரசாங்கம் தமது கட்சிக்கு எந்தவகையிலும் வற்புறுத்தல் எதனையும் வழங்கவில்லை என்றும் எனவே இந்தியாவின் தூண்டுதலுடன் தாம் செயல்படுவதாக கூறப்படுவது முற்றிலும் தவறானது என அவர் மேலும் தெரிவித்தார்.

# விலைகுறைப்பு குறித்து கொழும்புடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கையிருப்பில் இருக்கும் பொருள்களிற்கு புதிய விலைகளை அமுல்படுத்துவது தொடர்பாக கொழும்பில் இருந்து பதில் கிடைத்ததன் பின்பே விலைக் குறைப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசினால் தமது தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக மா, பருப்பு ஆகியவற்றின் விலைகளை குறைத்துள்ளமைதெரிந்ததே.

இவ்விலைகளை யாழ் குடாநாட்டிலும் உடனடியாக அமுல் படுத்துவது தொடர்பாக செயலகத்தில் கையிருப்பில் இருக்கும் மேற்படி பொருள்களிற்கு விலைகுறைப்பை செய்யுமாறு கொழும்புடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் இதற்கான பதில் வந்த பின்பே இங்கு கையிருப்பில் இருக்கும் மேற்படி பொருள்களிற்கு விலை குறைப்பு செய்து வழங்க முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### தேர்தல் வன்முறை காரணமாக தேடப்பட்ட

# முன்னாள் அமைச்சர் அலுவிகார பிள்ளைகளுடன் நீதிமன்றில் சரண்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக தேடப்பட்டு வந்த முன்னாள் அமைச்சர் மற்றும் மாத்தளை மேயர், மாகாணசபை உறுப்பினர் ஆகியோர் நேற்று தமது சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர்.

மாத்தளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அலுத்அலுவிகாரவும் இவரின் பிள்ளைகளான மாத்தளை மேயர் ரஞ்ஜித் அலுவிகார மத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த அலுவிகார ஆகியோரும் மற்றும் இவர்களுடன் இணைந்து இயங்கிய பலரும் நேற்று சரணடைந்தனர்.

மாத்தளை பகுதியில் நடைபெற்ற தேர்தல் வன்முறைகள் பொதுமக்கள் வீடுகள் தீயிடப்பட்டமை மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி காரியாலயம் உடைத்து சேதமாக்கியமை எதிர்க்கட்சி ஆதரவாளர் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக இவர்கள் தேடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் சரணடைந்தவர்களை நீதிபதி பிணையில் செல்ல அனுமதித்ததாகவும் இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது

# எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு சட்டவிரோதம்

## வழக்குத் தாக்கல்செய்ய ரணில் முடிவு

சிறிலங்கா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக காமினி திசநாயக்கா தெரிவுசெய்யப்பட்ட முறை முற்றிலும் தவறானது எனவும் இதுகுறித்து ரணில் விக்கிரமசிங்கா விரைவில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வழக்கு தாக்கல் செய்வது குறித்து ரணிலின் சட்டத்தரணிகள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்காவின் சட்டத்தரணி ஒருவர், ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி தலைமையில் வாக்கெடுப்பு நடத்தியது தவறென்றும் வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த பல உறுப்பினர்கள் கலந்துகொண்டனர் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் அல்லாதபொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நால்வரும், ஒஸி அபேகுணசேகர தலைமையிலான சிறிலங்கா மக்கள் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் வாக்கெடுப்பில் கலந்து கொண்டுள்ளனர் எனமேலும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இவ்வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என அவர் குறிப்பிட்டார். இவ்வாக்கெடுப்பின்போது ரணில் விக்கிரமசிங்கா மூன்று வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### கவின்கலை ஆசிரியர்கள் கலந்துரையாடல்கள்

கவின் கலை, மனையியல், தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றை பிரத்தியேகமாக கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளதாக தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினர் அறிவித்துள்ளனர். இதில் தமிழீழக் கலை பண்பாட்டுக் கழக உதவிப் பொறுப்பாளரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும், ஆசிரியர்களினது ஆலோசனைகள் கோரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல்கள் யாழ். நல்லூர் கோட்டங்களுக்கு இன்று காலை 10 மணிக்கு கலாலயா அக்கடமியிலும் தென்மராட்சி கோட்டத்தில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 10 மணிக்கு தென்மராட்சி மாணவர் அமைப்பிலும் மருதனார்மடம் கோட்டத்தில் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு கோட்டத்தில் இரண்டாம் திகதி காலை 11 மணிக்கு சித்தன்கேணி சுப்ரா கல்வி நிலையத்திலும், வடமராட்சி கோட்டத்தில் இரண்டாம் திகதி மாலை 3-00 மணிக்கு மாலிசந்தி சதாபொன்ஸ் கல்வி நிலையத்திலும் இடம் பெறவுள்ளன.

### ஜா-எல அசிட்வீச்சு சம்பவம்

# ஜோசப் மைக்கல் பெரேரா பொலிசில் சரணடைந்தார்

(கொழும்பு)

கம்பஹா மாவட்ட ஐ தே. க. எம். பியான ஜோசப் மைக்கல் பெரேரா கடந்த வெள்ளியன்று பொலிசில் சரணடைந்துள்ளார். ஜா-எல பகுதியில் இடம் பெற்ற அசிட் வீச்சு சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் இவர் தேடப்பட்டு வந்தார்

நீர்கொழும்பு நீதவான்முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் தேர்தலன்று வாக்குப் பெட்டியை பறிக்கும் முகமாக பொலிசார் மீது அசிட் வீசியதாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது

### கூட்டுறவு நிறுவனங்களில் திடீர் கணக்கு சோதனை

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினர் கூட்டுறவு நிறுவனங்களை திடீர் கணக்காய்வுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரின் கணக்காய்வுப் பிரிவினர் கடந்த வாரம் பவேலனை ப.நோ.கூசங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் திடீரென கணக்காய்வு செய்ய ஆரம்பித்துள்ளதாக தெரியவருகின்றது.

தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால் எந்த கூட்டுறவு நிறுவனத்திலும் எந்த நேரத்திலும் திடீரென கணக்காய்வு மேற்கொள்ளப்படலாம் என மேலும் தெரியவருகின்றது.

### காலத்துக்கேற்ற கொள்கை மஜ.மு வகுத்துக்கொள்ளும்

(கொழும்பு)

சென்ற பொதுத்தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து விரைவில் அக்கட்சி ஆராய இருப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்படி கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றதாகவும் இதில் இம் முடிவெடுக்கப்பட்டதாகவும்...

### மாகாண முதல்வர் தெரிவு ஐ. தே. க விற்குள் போட்டி

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சராக நிமால் பண்டார தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக...

ஐ தே. க மாகாணசபை உறுப்பினர்களிடையே கடும் போட்டி நிலவியதாகவும் இரகசிய வாக்கெடுப்பின்மூலமே...

### புதிய கொள்கை வரும்

விளையாட்டுத்துறை தொடர்பாக விரைவில் தேசியக் கொள்கை உருவாக்கப்படும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திஸநாயக்க தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பிரபல நிபுணர்கள், விளையாட்டு வீரர்களது கருத்துக்களும், யோசனைகளும் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

விளையாட்டுத் துறையிலிருந்து அரசியலை நீக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரி...

### பேச்சுக்கள்

வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையின் மூலம் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்களை ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்திருப்பதை அறியமுடிகின்றது. இதற்குமுன்னர், புலிகளின் சர்வதேச நிலையப் பிரமுகர் ஒருவரும், இவ்வாறான நிலைப்பாட்டை தெரிவித்திருந்தார். கடந்த ஜூன் மாதம் கூட புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தாங்கள் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார் என யாழ்ப்பாணத்தில் வைத்து என்னிடம் கூறியிருந்தார்.

புலிகளின் தற்போதைய அறிவிப்பை நல்லெண்ண சமிக்கையாக வைத்து புதிய அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும்.

புலிகள் நிபந்தனையற்ற பேச்சு என அறிவித்திருந்தா...

யாழ். ஸ்ரீதரில்

இன்று காலை 10.30 மணிக்கு மட்டும்

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30 மணிக்கு மட்டும்

BRUCELEE, CHUCK NORRIS

நடித்த

# WAY OF THE DRAGON

கராட்டிப் படம்

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

# CIRCUS

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின்மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும் பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

(சி-10173)

# மலிவு விற்பனை

பீங்கான் கண்ணாடி பொருட்கள்
ஆலய உபகரணங்கள்
வேறும் தேர்ந்த பொருட்கள்
கழிவு விலையில் விற்பனையாகின்றன.

இன்றே வருக

**எழிலகம்**

யாழ்ப்பாணம்.

(சி-10209)

# ST. PATRICK'S COLLEGE

JAFFNA

College will re-open on Monday, 05.09.1994 for thə "Christmas Term"

RECTOR

(சி-10208)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கதிலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

(கொழும்பு)

வடமேல் மாகாண சபையின் முதலமைச்சராக நிமால் பண்டார தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அம்மாகாண ஆளும்கட்சி அமைச்சர்களிடையே பெரும் கருத்து வேறுபாடுகள் நிலவிவருவதாக தெரியவருகிறது.

மேற்படி மாகாணசபை முதலமைச்சராக இருந்த ஜி. எம். பிரேமச்சந்திரா பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்றதையடுத்து ஏற்பட்ட மேற்படி பதவிவெற்றிடமாகியது.

இம் மாகாண முதலமைச்சரை தெரிவு செய்யும்போது ஐ. தே. க மாகாண சபை உறுப்பினர்களிடையே கடும் போட்டி நிலவியதாகவும் இரகசிய வாக்கெடுப்பின்மூலமே நிமால் பண்டார முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இவரின் தெரிவு ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பெரும் கருத்து வேற்றுமையை ஏற்படுத்தியிருப்பதாக இம் மாகாண சபையின் சிரேஸ்ட உறுப்பினர் சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடமேல் மாகாண சபை முதல்வராக நிமால் பண்டார ஆளுநர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

## வீதியில்

ர்பாக காவல்துறையினரால் சந்தேகத்தின்பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு காலில் வெட்டுக்காயம் ஒன்று ஏற்பட்டிருப்பதால் அவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பிரேத பரிசோதனை தொடர்பான அறிக்கை கிடைத்ததும் மேல் விசாரணை தொடரும் எனவும் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளதாகவும் காவல் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்-

(சி)

## திறைசேரி

பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், ஒப்பந்தங்கள் என்ற போர்வையில் இக்கொள்ளை நடைபெற்றுள்ளதாகவும் எனவேதான் பல ஒப்பந்தங்களுக்கு இந்த அரசாங்கம் இடைக்கால தடை. உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்

இவை குறித்து விரைவில் பொதுமக்களுக்கு தெளிவான ஒரு அறிக்கை வெளியிடதாம் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்

## படை

படுகின்றது.

தற்போது இது குறித்து பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பேச்சுக்களை நடத்தியதாகவும் இது குறித்து முடிவு எடுக்கப்படாமையினால் சந்திரிக்கா குமாரணதுங்கா இச்சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளார். எனவும் தெரியவருகின்றது.

பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள், இராணுவ கட்டளை அதிகாரிகள் மற்றும் கள அதிகாரிகளுடன் இது பற்றி எதிர்வரும் வியாழனன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவது, போர் நிறுத்தத்தை அமுல் செய்வது போரை நிறுத்தி நிரந்தர அமைதிக்கான அரசியல் தீர்வை காண்பது குறித்து சந்திரிகா கலந்தாலோசிக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் மேற்படி கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றதாகவும் இதில் இம் முடிவெடுக்கப்பட்டதாகவும் காலத்திற்கு ஏற்ற வகையில் தமது கொள்கைகளை மாற்றி அமைத்துக் கொள்ளப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறையிலிருந்து அரசியலை நீக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் பாடவிதானத்திலும் விளையாட்டு சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சமிக்கையாக வைத்து புதிய அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும்.

புலிகள் நிபந்தனையற்ற பேச்சு என அறிவித்திருந்தாலும், சில நல்லெண்ண நடவடிக்கை எடுக்கும்படி அரசைக் கேட்டுள்ளார்கள் இது பெரிய நிபந்தனைகள் என கருத இடமில்லை பொருளாதாரத் தடையை நீக்குதலும், யுத்த நிறுத்தமுமே இவையாகும்

பேச்சுக்களுக்கு,சிங்கள இனவாதிகளிடமிருந்து கிளம்பும் எதிர்ப்பு பாரதூரமானதாக நிச்சயம் இருக்கும் ஏனெனில் கடந்த தேர்தலில் மக்கள் இவர்களை நிராகரித்து விட்டார்கள் இதை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன தமிழ் மக்களது சார்பாக புலிகள் தலைவர் பிரபாகரன் தனித்துப் பேசும் நிலையில், இருப்பதால் பிரச்சினைகள் எழ வாய்ப்பில்லை எனவும் அவர் தெரிவித்தார்

# ஜப்பானின் உதவியுடன் புதிய பல்கலைக்கழகம்

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கட்படும் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்

ஜப்பானிய அரசின் நிதியுதவி இதற்காக கோரப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார் விவசாயம், பொருளாதாரம், தொல் பொருளியல்,நீர்ப்பாசனபொறிமுறை, மருத்துவம் ஆகிய பகுதிகள் இப்பல்கலைக்கழகத்தில்அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்

## நல்லூர்

கொண்டவர்களிடமிருந்து இக்கொடை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

நல்லூர் கந்தன் ஆலய சூழலில் செயற்படும் இடம் பெயர்ந்தவர்க்கான சிகிச்சை நிலையத்தில் புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் குருதிக் கொடை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்,

## காவல்துறை

நாலகர் ஒருவரின்வீட்டிலுமே நிகழ்ந்துள்ளது- இவ் இரு வீடுகளும் ஒரே வளவினுள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது- இதே வேளை வேறு சிலரது வீட்டிலும் இவ்வாறு நிகழ்ந்துள்ளதாக தெரிய வருகின்றது.

(சி)

## வழக்கு

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் சுமார் இருநூறு பேர் மட்டில் இருப்பார்கள் என்றும் இவர்களில் நூற்றிமுப்பத்திஏழு பேர் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் ஏனையவர்கள் வேறு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் ஜயலத் கமிஷன் குறிப்பிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எம்பிலிப்பிட்டிய

சேர்ந்த முப்பத்தியொரு மாணவர்களை இராணுவத்தினரிடம் இவர் ஒப்படைத்தார் என்றும் அம் மாணவர்களுக்கு என்ன நடந்தது என தெரியவில்லை என்றும் கூறப்பட்டு வருகின்றமை தெரிந்ததே

தற்போது அவர் பதவி உயர்வு வழங்கப்பட்டு சப்பிரகமுவா மாகாண கல்வி திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியதாகவும் இவர் நிதி மோசடி தொடர்பாக இடை நிறுத்தம் செய்யப்பட்டதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.


# மரண அறிவித்தல்

## வையாபுரி முருகேசு பூபாலசிங்கம்

காரைநகர், களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட வருமான வையாபுரி முருகேசு பூபரலசிங்கம் கொழும்பில் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-

132/2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பூ. பரமேஸ்வரன்
(மகன்)

(9237)